பக்கங்கள்: 15

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 20 செவ்வாய்க்கிழமை 02.04.2024 கதிர் 147

# மைத்திரியின் கருத்தால் நேற்று சபையில் கடும் வாதப் பிரதிவாதம்

## எதிர்க் கட்சித் தலைவர் சஜித்தின் கேள்வியால் சர்ச்சை

உயிர்த்த ஞாயிறு சம்பவம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளிப்படுத்திய விடயங்கள் தொடர்பிலும், அச்சம்பவம் தொடர்பில் நீதியான விசாரணை தேவையென்றும் சபையில் வாதப்பிரதிவாதங்கள் முன்வைக்கப்பட்டன.

நாடாளுமன்றம் நேற்றுக் காலை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் ஆரம்பமான போது எதிர்க் கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச கேள்வியைத் தொடுத்தார். அவர், தனது கேள்வியில்,

☞ 2

## இது ரகசியம் அல்ல!

இலங்கையிலும் இந்த ஆண்டு தேர்தல்தான் என்றாலும் அதற்கு முன்னதாக இந்தியாவில் தேர்தல் நடக்கிறது என்பதால் அங்கு நிலமைகள் அனல் பறக்கத் தொடங்கிவிட்டன. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் கச்சதீவு விவகாரம் இந்தத் தேர்தலில் முக்கிய பேசு பொருளாக இருக்கப் போகிறது. தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் காங்கிரஸ் கூட்டை எதிர்கொள்வதற்கான சக்கரவியூகமாக கச்சதீவு விவகாரத்தை கையிலெடுத்திருக்கிறது இந்திய ஒன்றிய ஆளும் தரப்பான பாரதீய ஜனதாக் கட்சி.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தைப் பயன்படுத்தி கச்சதீவு தொடர்பில் பெறப்பட்ட விடயங்கள் என்று டில்லியில் அயலுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கரும் தமிழ்நாட்டில் அண்ணாமலையும் இந்தவிவகாரதத்தை நேற்று தூக்கிப் பிடித்தார்கள். தமிழ்நாட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அதற்குப்பதிலடியும்வழங்கியிருந்தார். கச்சதீவைத் தாரை வார்த்தது காங்கிரஸ்தான் அதற்கு உடந்தையாக இருந்தது திமுகவே என்கிற

☞ 2

## லிற்ரோ எரிவாயு விலை குறைப்பு

லிற்ரோ சமையல் எரிவாயுவின் விலைகள் நேற்று நள்ளிரவு முதல் குறைக்கப்பட்டுள்ளதாக லிற்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இதன்படி 12.5 கிலோ எடையுடைய லிற்ரோ சமையல் எரிவாயு 135 ரூபாயினால் குறைக்கப்பட்டு 4,115 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும்.

இதேவேளை, 5 கிலோ எடையுடைய லிற்ரோ சமையல் எரிவாயு 55 ரூபாவினால் குறைக்கப்பட்டு 1,652 ரூபாவுக்கும், 2.3 கிலோ எடையுடைய லிற்ரோ சமையல் எரிவாயு 23 ரூபாவினால் குறைக்கப்பட்டு 772 ரூபாயுக்கும் விற்பனை செய்யப்படும்.

டொலர்களுக்கு எதிராக ரூபாவின் பெறுமதி வலுவடைந்து வருவதனால் இந்த மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. இந்தவிலைகளில் மேலும் குறைப்புக்கள் இடம்பெறுவதற்கு வாய்ப்புக்கள் உள்ளன என்றார்.

இதேவேளை, லாஃப் நிறுவனமும் விலைகளைக் குறைத்துள்ளது. அந்த வகையில் 12.5 கிலோ எடையுடைய சமையல்எரிவாயுவின்விலையை 625 ரூபாயினால் குறைத்துள்ளது.

☞ 8

## காஸாவிற்கு முதற்கட்டமாக ஒரு மில். டொலர் நிதி உதவி

### பாலஸ்தீன தூதரிடம் கையளித்தார் ஜனாதிபதி

காஸா பகுதியில் இடம்பெறும் மோதல்களினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்காக இலங்கை அரசின் ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் நன்கொடையை ஐக்கியநாடுகள்சபையின் உத்தியோகபூர்வமுகவர் நிறுவனத்தின் ஊடாக பாலஸ்தீன அரசிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்றுக்காலை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இதற்கானகாசோலை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் இலங்கைக்கான பலஸ்தீனதூதுவர் கலாநிதி சுஹேர் ஹம்தல் லாஹ் ஸைதிடம் உத்தியோக பூர்வமாகக் கையளிக்கப்பட்டது.

ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற காசோலைகையளிக்கும் நிகழ்வில் வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன

☞ 2

## ஞானசாரருக்கு பொது மன்னிப்பு வழங்கவேண்டும் ஜனாதிபதி

### இராஜாங்க அமைச்சர் சபையில் வலியுறுத்து

நீதிமன்றத்தால் 4 வருட கடுங்காவல் தண்டனை வதிக்கப்படடுள்ளவரான பொது பல சேனாவின் பொதுச்செயலாளர் ஞானசார தேரருக்கு ஜனாதிபதி பொது மன்னிப்புவழங்கவேண்டும் என்று சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி

☞ 8

## ஐ.நா. பிரதிநிதி சபாநாயகருடன் நாடாளுமன்றில் நேற்று சந்திப்பு

ஐக்கியநாடுகள்சபையின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க்-ஆன்ட்ரே பிராஞ் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை நாடாளுமன்றத்தில் சந்தித்தார்.

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டங்கள், நாடாளுமன்றத்துக்கு முன்வைக்கப்படவுள்ள சட்டமூலங்கள், நாடாளுமன்ற அபிவிருத்தி தொடர்பான செயற்பாட்டுத்திட்டத்தின் முன்னேற்றம் மற்றும் நாடாளுமன்ற முறைமை தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

அத்துடன், நாடாளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியத்தின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் கௌரவ (வைத்தியகலாநிதி) சுதர்ஷினி பர்னாந்து புல்லேவை இதற்கு

☞ 2

## யார் வேண்டுமானாலும் ஆளலாம் என நினைக்கிறார்கள் அது யாராலும் செய்யக்கூடிய காரியம் அல்ல – சேமசிங்க

நாடு இதுவரை அடைந்துள்ள முன்னேற்றத்தைப்பார்க்கும்போது, நாட்டை யார் வேண்டுமானாலும் ஆளலாம் என்று சிலர் ஆசைப்படுகிறார்கள். ஆனால் அது தவறான எண்ணம் என்பதைக் கூற வேண்டும். இப்போது நாடு இயல்பு நிலைக்குத் திரும்பியிருப்பதால் சிலர் இப்படி நம்பலாம். ஆனால் அது யாராலும் செய்யக் கூடிய காரியம் அல்ல என்று நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

'அஸ்வெசும' இரண்டாம் கட்டத்திற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்ட பின்னர், அதற்காக சுமார் 4 இலட்சம் விண்ணப்பங்கள் கிடைக்கும் என எதிர்பார்க்கிறோம்.

அதன்படி, 24 இலட்சம் பேருக்கு அஸ்வெசும வழங்கும் பணி நிறைவு செய்யப்பட உள்ளது. ஆனால் கடந்த மே மாதம் முதல் அஸ்வெசும கொடுப்பனவு கோரி

☞ 9

## மத்திய வங்கி ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு மீளாய்வு

### தனிக் குழுவை நியமித்தார் ஜனாதிபதி

அரச நிதிக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் இலங்கை மத்திய வங்கி ஊழியர்களின் சம்பள அதிகரிப்பை மீளாய்வு செய்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நிதி பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சர் என்ற வகையில் சுயாதீன ஊதியக் குழுவொன்றை நியமித்துள்ளார்.

அரசநிதிக்குழுவிற்கும் இலங்கை மத்திய வங்கிக்கும் இடையில் இடம்பெற்ற அனைத்து கடிதத் தொடர்புகளின் அடிப்படையில், இலங்கை மத்திய வங்கியின் சுயாதீனத்தன்மைக்கு பாதிப்பு இல்லாத வகையில் பிரச்சினைக்கு நியாயமான தீர்வுகாண இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

☞ 2

## "தற்துணிபற்றவர் மைத்திரி" காவிந்த எம்.பி. கடும் சாடல்

உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புக்களுக்குக் காரணமானவர்கள் யார் என்பதை மக்களுக்குச் சொல்லும் தற்துணிபற்றவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற ஆயுர்வேதசட்ட ஒழுங்குவிதிகள் தொடர்பான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புக்கள் நிகழ்ந்து ஐந்தாண்டுகள் நிறைவடைந்துள்ள போதும் இன்றுவரை நீதி கிடைக்கவில்லை. உண்மைக்கான காத்திருப்பு மாத்திரமே மிகுதியாகின்றன. நாடாளுமன்ற உறுப்பினர் மைத்திரிபால சிறிசேன இதற்காக வெட்கப்படவேண்டும்.

குண்டுவெடிப்புக்களின் பிரதான சூத்திரதாரி தொடர்

☞ 2

## மேலதிக உறுப்பினர்கள் நியமனம்

'தண்டனைச் சட்டக்கோவை (திருத்தம்)' சட்டமூலம் தொடாபில் ஆராய்வதற்காக மேலதிக உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக, சபாநாயகர் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன சபைக்கு அறிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றையதினம் சபாநாயகர் அறிவிப்பு நேரத்தின்போதே அவர் மேற்கண்ட அறிவிப்பை விடுத்தார்.

☞ 2

## இந்திய மீனவர்களின் விளக்கமறியல் நீடிப்பு

### பொதுச் சொத்துக்கு சேதம் விளைவித்த குற்றச்சாட்டில்

இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்த குற்றச்சாட்டில் கடந்த மாதம் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களின் விளக்கமறியல் மீண்டும் நீடிக்கப்பட்டுள்ளது.

மார்ச் 17 இந்திய மீனவர்கள் 21 பேர் காரைநகர் கடற்பரப்பில் வைத்து 2

☞ 2

## "அன்றே சொன்னேன் கேட்கவில்லை" நீதி அமைச்சர் சபையில் சுட்டிக்காட்டு

உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்புக்கள் குறித்து அன்றே தான் சொன்னபோதும் எவரும் கேட்கவில்லை என்று நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாசராஜபக்ச நேற்று நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற அமர்வின் போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

☞ 2

## கச்சதீவு தொடர்பில் இந்திய அமைச்சர் விளக்கமளிப்பு

கச்சதீவை இலங்கைக்கு வழங்கிய விடயத்தில் கடந்த காலங்களில் என்ன நடந்தது என்பது தொடர்பாக இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கர் நேற்று புதுடில்லியில் விளக்கமளித்துள்ளார்.

டில்லியில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்

☞ 8

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

கருத்தியலை தமிழ்நாட்டு மக்கள் மத்தியில் விதைத்து, அதைத் திரும்பப் பெறுவதென்றால் அல்லது இந்தப் பிரச்சினைக்கு மீனவர்களுக்குச் சுமூகமான ஒரு தீர்வு வேண்டுமென்றால் அதனை பாஜகவால் மட்டும்தான் பெற்றுத்தரமுடியும்என்றுதமிழ்நாட்டு மக்களை நம்ப வைத்து வாக்கு வேட்டையாடுவதுதான் பாஜகவின் திட்டம் போன்று தெரிகிறது.

அது எவ்வளவு தூரம் சாத்தியமானது என்பது ஒருபுறம் இருக்க, தேர்தல் நேரத்தில் பாஜக இந்தப் பரப்புரைப் புள்ளியை நோக்கிநகர்வதற்குவசதியாகத்தான் இலங்கை ஆளும் தரப்பின் நடவடிக்கைகளும் திட்டமிடப்பட்டு அரங்கேற்றப்பட்டனவோ என்கிற சந்தேகங்கள்எனக்குண்டு. இதுஒரு வழிவரைபடத்தின் அடிப்படையில் நகர்த்தப்பட்டசம்பவங்களோஎன்கிற சந்தேகம்தான் அது.

இந்தியாவிலிருந்து வந்து அத்துமீறும் இழுவைமடிப் படகுகளால் இங்குள்ள மீனவர்கள் கடுமையாகப் பாதிக்கப்படுகிறார்கள் என்பது உண்மை. அது இன்று நேற்றல்ல, போருக்குப் பின்னரான கடந்த 15 வருடங்களாகவே நிலமை இதுதான். இதைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று வடக்கு கிழக்குத் தமிழ் மீனவர்கள் தொடர்ந்து குரல் கொடுத்து வந்திருக்கிறார்கள். பல போராட்டங்களையும்நடத்திவந்திருக்கிறார்கள். இந்த நிலையில் இந்த கடந்த பல மாதங்களாகத்தான் இப்படிப் போராடும் மீனவர்களுக்கு அரசஆதரவுகிடைக்கப்பெற்றதுடன், கொழும்பின் மீன்பிடித்துறை அமைச்சரே இத்தகைய போராட்டங்களை ஊக்குவித்து அவற்றின் பின்புலமாகவேறு செயற்பட்டு வந்தார்.

படகுகளில்சென்று இந்தியாவில் பேசப்போகின்றோம், அதைத் தடுத்தால் விமானத்தில் சென்று பேசப்போகின்றோம், அதற்காக உண்டியல் குலுக்கிப் பணம் சேர்க்கின்றோம் என்றெல்லாம் மீனவர்கள் பேசியதிலும் பார்க்க, கொஞ்சக் காலமாக மீன்பிடித்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பேசியதுதான் அதிகம். ஒருபுறத்தில் மீனவர் சங்கங்களில் முன்னர் இருந்த நிர்வாகிகள் அமைச்சரின் ஆதரவு ஆட்களால்வெளியேற்றப்பட்டுமீனவ சங்கங்கள்அவரதுகட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதன் பின்னர் இந்தப் பிரச்சினை குறித்து அவர்கள் போராடுவதும், அடிக்கடி இந்தியத் துணைத் தூதரகத்தை முற்றுகையிடுவதும், பட்டினிப் போராட்டம் நடத்துவதும் என எதிர்ப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டன.

இந்த அழுத்தங்களால் தவிர்க்க முடியாதநடவடிக்கைகள்என்பதாகக் காட்டிக்கொண்டு கடந்த சில மாதங்களாகபலஇந்தியப்படகுகளும் அவற்றிலிருந்தமீனவர்களும்கைது செய்யப்பட்டனர். படகுகளின் உரிமையாளர்கள் படகில் இருந்தாலென்ன இல்லாவிட்டால் என்ன அவர்களும் குற்றவாளிகள் பட்டியலில் கொழும்பு அரசால் சேர்க்கப்பட்டனர். எல்லாவற்றுக்கும் மேலாக, அண்மையில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் மீது எல்லை தாண்டிய குற்றச்சாட்டு மட்டுமன்றி கடற்படையினரைத் தாக்கினார்கள், பொதுச் சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்தார்கள் என்றெல்லாம் மேலதிகமாகக்குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி அவர்களைத் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைத்திருக்கிறார்கள்.

தமிழ்நாட்டில்இந்தப்பிரச்சினை தீப்பற்றிக்கொண்டு எரிவதற்கு ஏற்றவகையில்இக்கரையில்நடவடிக்கைகள் திட்டமிட்டு மேற்கொள்ளப்படுகின்றனவோ, ஒரு வழி வரைபடத்தின் அடிப்படையில்தான் இந்தக் காட்சிகள் அனைத்தும் கட்டவிழ்கின்றனவோ என்று வலுவான சந்தேகம் எழுவதைத் தவிர்க்க முடியவில்லை. தமிழ்நாடு மீனவர்களுக்கான பிரச்சினைகளைத் தீவிரமாக்கி, அதனைப் பூதாகாரமாக்கி தமிழ்நாட்டின் நாடாளுமன்றத் தேர்தலின் மையப் புள்ளியாக்கி அதற்கு காங்கிரஸ்ஸும்திமுகவுமே காரணம்என்றுமுத்திரைகுத்துவதன் மூலம் தேர்தலில் தனக்குச் சாதகமான நிலை ஏற்படும் என்று பாஜக திட்டமிடக்கூடும்.

அரசுக்கு அரசு உதவி, ஆளும் தரப்புக்கு ஆளும் தரப்பு உதவி, இரு தரப்பிலும் தற்போது ஆட்சியிலிருப்பவர்களேதொடர்ந்தும் ஆட்சிக்கு வந்தால்தான் பாலம், அதானி குடும்பத் திட்டம் உட்பட பலவற்றையும் செயற்படுத்த முடியும் என்பதால் அதற்கான பரஸ்பரஉதவிஎன்றவகையில்ஒரு வழிவரைபடம் இருகரைகளிலும் புழக்கத்தில்உள்ளதோஎன்பதுதான் எனக்கிருக்கும் தீவிர சந்தேகம். இன்னும் கொஞ்ச நாள் பொறுத்திருந்து பார்ப்போம்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## மைத்திரியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பந்தமான விசாரணை அறிக்கையில் பகுதியொன்று நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மறைக்கப்பட்டுள்ளது. இதனால் பல்வேறு நபர்களும்சர்ச்சைக்குரிய கருத்துக்களை வெளியிட்டு வருகின்றார்கள்.

ஆணைக்குழு நியமிக்கப்பட்டது, பல்வேறு அறிக்கைகளும், பரிந்துரைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன. ஆனால் அந்தப் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படவில்லை. அதற்கான காரணம் என்ன? சர்வதேசதரப்பினைதொடர்புபடுத்தி விசாரணையை முன்னெடுப்பதாக தற்போதைய ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். அந்தவிசாரணை எங்கே என்றார்

குறுக்கிட்ட இராஜாங்கஅமைச்சர் சாமரசம்பத்தசநாயக்க, எதிர்க்கட்சித் தலைவர் எழுப்பும் கேள்விகள் நியாயமானவை. தெஹிவளையில் குண்டை வெடிக்கச் செய்தவர்கள் ஜே.வி.பி.யின் தேசியப் பட்டியலில் இருந்தவரின் மகனா என்ற விடயமும் சேர்க்கப்படவேண்டும் என்றார்.

தொடர்ந்த சஜித் பிரேமதசா, இந்தப் விடயத்தினை நகைப்புக்கு உட்படுத்தாது எனது கேள்வியை தொடர்வதற்கு சந்தர்ப்பத்தினை தாருங்கள் என்றபடி கேள்வியைத் தொடர்ந்தார். குண்டை வெடிக்கச் செய்வதற்குமுன்னதாகபுலனாய்வுப் பிரிவினர் செயற்படாமைக்கு காரணம் என்ன? அந்தத் தாக்குதல் மூலம் கோட்டாபய ராஜபக்சவுக்கே அனுகூலம் கிடைத்தது. அவர் பதவிக்கு வந்தவுடன் விசாரணை அதிகாரிகள் உட்பட முப்பதுக்கும் மேற்பட்டவர்களைஇடம்மாற்றினார். இதற்கான காரணம் என்ன? முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மிகத்தெளிவாக கருத்துக்களை வெளிப்படுத்தி வாக்குமூலம் அளித்துள்ளார். ஆகவே சூத்திரதாரியை நாட்டுக்கு வெளிப்படுத்துங்கள். அத்துடன் இந்த வினாக்களுக்கு உடனடியாக இன்றே பதிலளியுங்கள் என்றார்.

இதனையடுத்துசபைமுதல்வரும் அமைச்சருமான சுசில் பிரேமஜெயந்த, நிலையியல்கட்டளையின் கீழ் கேள்விகளை கேட்கும்போது அதற்கான உரிய பதில்களை சேகரித்து வழங்க ஆளும் தரப்புக் கடமைப்பட்டுள்ளது. அதனை நாளொன்றுக்குள் வழங்குவதற்கு அரசாங்கம் கட்டுப்படவில்லை. நாம் எதிர்க்கட்சித்தலைவரின் கேள்விக்கு பதிலளிப்போம் என்றார்.

பின்னர் எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச, உங்களால் ஏன் நாளொன்றுக்குள் பதிலளிக்க முடியாது. நீங்கள் சர்வதேச விசாரணையை முன்னெடுப்பதாக வாக்குறுதி அளித்தீர்கள் அல்லவா? என்றார்.

அதற்குப் பதிலளித்த அமைச்சர் சுசில், எதிர்க்கட்சித்தலைவரே, நீங்கள் தான் குண்டு வெடிப்பு இடம்பெற்ற சமயத்தில் இருந்த ஆளும் தரப்பில் அமைச்சராக இருந்தீர்கள். விசாரணைகளை ஆரம்பிப்பதற்கான அனுமதியை வழங்கிய அமைச்சரவையிலும் இருந்தீர்கள் என்பதை மறந்து விடாதீர்கள் என்றார்

பின்னர், சஜித்பிரேமதாச, நீங்கள் சரியான இடத்துக்கு வந்துள்ளீர்கள். ஆம் நான் அமைச்சரவையில் இருந்தேன். அச்சமயத்தில் எதிர்க்கட்சியில் இருந்த நீங்கள் இந்த விடயம்சம்பந்தமாகவாக்குறுதிகளை அளித்து மக்களின் ஆணையைப்

## தற்துணபற்றவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பில் அவர் சொன்னார், இவர் சொன்னார், நிகழ்வொன்றில்வைத்து குறிப்பிட்டார். என்று சிறுபிள்ளை போல் பேசுகிறார். மக்கள் மத்தியில் உண்மையை குறிப்பிட அவருக்கு தற்றுணிவு கிடையாது.

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவத்தால் 269 இற்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டனர், 500 இற்கும் மேற்பட்டோர்படுகாயமடைந்தார்கள். பலர் இன்றும் படுக்கையில் விசேட தேவையுடையவர்களாக உள்ளார்கள். இவர்களின் நிலையைக் கண்டு மைத்திரிபால சிறிசேனவுக்கு மனவேதனை என்பதொன்று இல்லையா?

குண்டுவெடிப்பக்கள் அரசியல் தேவைக்காகவே நடத்தப்பட்டது என்பதற்கு பல விடயங்களை குறிப்பிடலாம். குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்ட தினத்தன்றுதற்கொலை குண்டுதாரியான ஜமீலின் வீட்டுக்கு சி.ஐ.டி.யினர் சென்றமை, மாத்தறை பொடி சஹ்ரான், சொனிக் சொனிக் என்ற சொல், அபூபக்கர், குண்டுத் தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட பொருட்கள் அடங்கிய வாகனம் களனிகம வீதி சோதனை சாவடியில் வைத்து பரிசோதனை செய்யாமல் விடுவிக்கப்பட்டமை அத்துடன் குண்டுவெடிப்புக்கள் தொடர்பில் சர்வதேச மட்டத்தில் தகவல் கிடைத்ததாக பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிலந்தஜயவர்தனகுறிப்பிட்டுள்ளமை உள்ளிட்ட பலவற்றையும் கூறமுடியும்.

அரசியல் நோக்கத்துக்காகவே குண்டுவெடிப்புக்கள் நிகழ்த்தப்பட்டன. தற்போது குண்டுத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரியும் அரசியல் நோக்கத்துக்காவே பாதுகாக்கப்படுகிறார். ஆகவே மைத்திரிபால சிறிசேன நாட்டு மக்களுக்காகவேனும்உண்மையை பகிரங்கப்படுத்த வேண்டும். பாதிக்கப்பட்ட எம் மக்களுக்கு நீதி வேண்டும் என்பதை தொடர்ந்து வலியுறுத்துவோம் அதற்காக போராடுவோம் என்றார்.

## இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படகுகளுடன் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவர்கள் கடல் எல்லையை மீறிய குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்கப்பட்டபோதிலும், மேலும்4 குற்றச்சாட்டுகளின் கீழ் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த வழக்கு நேற்று ஊர்காவற்றுறை நீதவான் ஜே.கஜநிதிபாலன் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. அப்போது இதில் ஒரு படகில் வந்தவர்களுக்கு எதிரான விசாரணை இடம்பெற்றது. 10 மீனவர்களுக்கு எதிராக 4 குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன.

கடற்படையினரைத் தாக்கி சிறுகாயம் விளைவித்தமை, சட்டவிரோதமாக கூட்டம் கூடியமை, அரச கடமைக்கு இடையூறு விளைவித்தமை மற்றும் பொதுச்சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தமை ஆகிய குற்றச்சாட்டுகள் இவர்கள் மீது முன்வைக்கப்பட்டுள்ளன.

நேற்று மன்றில் முற்பட்ட பொலிஸார், பொதுச்சொத்துக்கு சேதம் விளைவித்தமைக்காக 378,000 ரூபாய் நட்டஈடு கோரி மேலதிக அறிக்கையை தாக்கல் செய்தனர்.

பொதுச்சொத்துக்களுக்கு சேதம் விளைவித்த காரணத்தினால் அவர்களை பிணையில் விடுவிக்க முடியாதுஎனஉத்தரவிட்டநீதிவான், மீனவர்களை மார்ச் 5 வரை விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டார்.

## மேலதிக ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"தண்டனைச் சட்டக்கோவை (திருத்தம்)' எனும் சட்டமூலத்தின் பரிசீலனைக்கென சட்டவாக்க நிலையியற்குழுவில்சேவையாற்றும் பொருட்டு ஜீவன் தொண்டமான், தாரக்கபாலசூரிய, அநுராதஜயரத்ன, (திருமதி) டயனா கமகே, புத்திக பத்திரண, மொஹமட் முஸம்மில், (திருமதி) முதிதா பிரிஸாந்தி மற்றும் கெவிந்து குமாரதுங்க ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் மேலதிக உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்'' என்று அவர் அறிவித்தார்.

இந்தத் தண்டனைச் சட்டக் கோவைத் திருத்தத்தின் கீழேயே, பெண்களின் பாலியல் செயற்பாட்டு வயதை 16இலிருந்து 14ஆகக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. இதற்குப் பெண்கள் அமைப்புகளிடம் இருந்து கடுமையான எதிர்ப்புக்கள் கிளம்பியிருந்தன.

## காஸாவிற்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் இலங்கைக்கான பலஸ்தீன தூதரக மூத்த அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் யோசனையின் பேரில் காஸா பகுதியில் இடம்பெற்ற மோதல்களினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்குநிவாரணம்வழங்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட காஸா சிறுவர்நிதியத்திற்குபெருமளவிலான நன்கொடையாளர்கள் ஏற்கனவே நிதியுதவி அளித்திருந்தனர்.

அத்துடன், இவ்வருடம் இப்தார் நிகழ்வுகளை நடத்துவதற்காக அமைச்சுக்கள் மற்றும் அரச நிறுவனங்களால் ஒதுக்கப்பட்ட நிதியை இந்த நிதியத்துக்கு வழங்குமாறு ஜனாதிபதி விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க, முதற்கட்டமாக காஸா சிறுவர் நிதியத்திற்காக வழங்கப்பட்ட ஒரு மில்லியன் அமெரிக்க டொலர்கள் பலஸ்தீனஅரசிடம்நன்கொடையாக வழங்கப்பட்டது.

அத்துடன், 'காஸா சிறுவர் நிதியத்திற்கு' பங்களிக்குமாறு நன்கொடையாளர்களிடம் ஜனாதிபதி அலுவலகம் விடுத்த கோரிக்கைக்கு அமைய, 20 மில்லியன்ரூபாவுக்கும்அதிகமான நிதி கிடைத்துள்ளதுடன், அந்த நிதி எதிர்வரும் நாட்களில் பலஸ்தீன அரசிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்படவுள்ளது.

நன்கொடையாளர்களுக்கு எதிர்வரும் ஏப்ரல் 30 ஆம் திகதி வரை மாத்திரமே இந்த நிதியத்திற்கு பங்களிக்க வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இதற்குப் பங்களிக்க விரும்புவோர் தமது நன்கொடைகளை இலங்கை வங்கியின் தப்ரபேன் கிளையின் 7040016 எனும் கணக்கு இலக்கத்தில் வைப்பிலிட முடியும். அதற்கான பற்றுச் சீட்டை 077-9730396 எனும் எண்ணுக்கு வட்ஸ்அப் ஊடாக அனுப்புமாறு ஜனாதிபதிஅலுவலகம்கோரியுள்ளது.

## அன்றே ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் தொடர்பில் பேசப்படுகிறது. 2016 ஆம் ஆண்டு நவம்பர்மாதமளவில்"ஐ.எஸ்.ஐ.எஸ்' அமைப்பில்ஒருசிலஇலங்கையர்கள் பயிற்சி பெற்றுள்ளார்கள். நாட்டில் குருதி வெள்ளம் ஓடும் செயற்பாடுகளில் ஈடுபட இவர்கள் எத்தணித்துள்ளார்கள். ஆகவே இவ்விடயம் குறித்து அவதானம் செலுத்தவேண்டும்'' என்று நீதி அமைச்சராக இருந்துகொண்டு குறிப்பிட்டேன்.

அடிப்படைவாதச்செயற்பாடுகள் தொடர்பில் நான் குறிப்பிட்ட கருத்துக்கு எதிராக எமது ஆளும் தரப்பின் அமைச்சரவை பேச்சாளர் உட்படஉறுப்பினர்கள்கடும்எதிர்ப்புத் தெரிவித்தார்கள். விஜேயதாச ராஜபக்ச ' பொய்காரர், இனவாதி, என்று என்னைக் கடுமையாக விமர்சித்தார்கள்.அதனைதொடர்ந்து அமைச்சு பதவியில் இருந்து நான் நீக்கப்பட்டேன்.

நான் குறிப்பிட்டதைப்போன்றே குண்டுவெடிப்புக்கள் இடம்பெற்றன. அந்தச் சம்பவத்துக்கு பின்னர் அப்போதைய ஆளும் தரப்பின் முக்கியதரப்பினர்அலரிமாளிகையில் ஊடக சந்திப்பை நடத்தி "நடந்தது நடந்து விட்டது, நாங்கள் என்ன செய்வது" என்று குறிப்பிட்டார்கள்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் நான் சாட்சியமளித்தேன்.

ஆணைக்குழுவில் நான் குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பில் எனக்குஎதிராகஇருதரப்பில்இருந்து நட்டஈடுகோரி கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது.

வழக்குத் தாக்கல் செய்யுமாறு நான் சவால் விடுத்தேன்.ஆனால் இதுவரை எவரும் எனக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவில்லை.

குண்டுத்தாக்குதல்சம்பவத்தால் நானும்பாதிக்கப்பட்டுள்ளேன்.இந்த சம்பவம் தொடர்பில் சட்டமா அதிபருக்கோ, நீதியமைச்சுக்கோ, நீதிமன்றத்துக்கோவிசாரணைகளை முன்னெடுக்க முடியாது.

பொலிஸ் உட்பட விசாரணை தரப்பினர் விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பித்தால் சட்டமா அதிபர் திணைக்களம் வழக்குத் தாக்கல் செய்யும் அதனை தொடர்ந்து அடுத்தக்கட்ட நடவடிக்கைகளைமுன்னெடுக்கலாம் என்றார்.

## ஞானசாரருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராஜாங்க அமைச்சர் அனுப பஸ்குவல் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற ஆயுர்வேத சட்ட ஒழுங்கு விதிகள் தொடர்பான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் ஞானசார தேரர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இவருக்கு ஆதரவாக நான் பேசவில்லை. இருப்பினும் உண்மையை மற்றும் யதார்த்தம் பற்றிஅவதானம்செலுத்தவேண்டும்.

கூரகல விகாரை விவகாரத்தை தொடர்புப்படுத்தி ஞானசார தேரர் குறிப்பிட்ட கருத்துக்கு எதிராக முன்னாள்பாராளுமன்றஉறுப்பினர் முஜிபுர் ரஹ்மான், முன்னாள் ஆளுநர் அசாத் சாலி ஆகியோர் வழக்குத் தாக்கல் செய்தார்கள். அந்த வழக்குக்கு அமையவே ஞானசார தேரருக்கு நான்காண்டு கால கடூழிய சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கூரகல விகாரை 2000 ஆண்டுகால பழமை வாய்ந்தது. இந்த விகாரையை அண்மித்த பகுதியில் இருந்த பௌத்த தொல்பொருள் மரபுரிமைகளை முஸ்லிம் அடிப்படைவாதிகள் அசிட் திரவம் ஊற்றி அழித்து, அடையாளங்களைச் சிதைத்து கட்டடங்களை அமைத்துள்ளார்கள். இதற்கு எதிராகவே ஞானசார தேரர் குரல் கொடுத்தார்.

பௌத்த மரபுரிமைகளை அழிக்கும் போது பௌத்தர்களின் மனம் வேதனையடையாதா? கூரகல விகாரையின் தொல்பொருள் மரபுரிமைகள் அழிக்கபபட்டுள்ளதை ஆளும் தரப்பே ஏற்றுக்கொண்டுள்ளது. இஸ்லாமிய அடிப்படைவாதம் பற்றி ஞானசார தேரரே தொடக்கத்தில் குறிப்பிட்டார். ஆனால்அதனைஎவரும்கவனத்திற் கொள்ளவில்லை. விளைவு உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பவத்தைத் தோற்றுவித்தது.

சுதேச முஸ்லிம்களை நெருக்கடிக்குள்ளாக்கும்வகையில்தோற்றம் பெற்றஇஸ்லாமியஅடிப்படைவாதம் பற்றி ஞானசார தேரர் குறிப்பிட்ட விடயங்கள் உண்மையாகியுள்ளன. பௌத்த அடிப்படைவாதம், இந்துஅடிப்படைவாதம், இஸ்லாமிய அடிப்படைவாதம் முழுமையாக நீக்கப்பட வேண்டும்.

ஞானசார தேரருக்கு கடூழிய சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளமை பௌத்தர்களுக்கு மனவேதனையளிக்குமாக இருந்தால் அது இனங்களுக்கு இடையில் முரண்பாட்டைஏற்படுத்திநாட்டில்தேவையில்லாத பிரச்சினைகளை ஏற்படுத்தும் ஆகவே அவருக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்க வேண்டும்.

இலங்கையர்கள் என்ற அடிப்படையில்அனைவரும்ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். கடந்த கால சம்பவங்களைமறந்துஅனைவரும் விட்டுக் கொடுப்புடன் செயற்படும் தேவை தற்போது காணப்படுகிறது என்பதை அனைவரிடமும் கேட்டுக் கொள்கிறேன் என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# அமைச்சர் வியாழேந்திரன் கபடமாக ஏமாற்றுகின்றார்

## சிறிநேசன் காட்டம்




கல்முனை வடக்கு பிரதேச செயலக விவகாரத்தில் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் கபடத்தனமாக ஏமாற்றினார் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிநேசன் தெரிவித்துள்ளார்.

கல்முனை பிரதேச செயலகத்தை சுயாதீனமாக செயற்பட அனுமதிக்குமாறு கோரி இடம்பெற்றுவரும் போராட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப பிட்டுள்ளார்.

இதேவேளை, எதிர்க்கட்சியில் தாங்கள் இருந்ததன் காரணமாக அரசாங்கத்துடன் ஒத்துப்போகும் நிலை ஏற்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், கல்முனை வடக்கு பிரதேச செயலகம் சுயாதீனமாக இயங்குவதற்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உறுதியான செயற்பாட்டை மேற்கொண்டு வருவதாக போராட்டத்தில் கலந்துகொண்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன், யோகேஸ்வரன் சுட்டிக்காட்டியுள்ளார். (05)

# சுற்றுலாப் பயணிகளினால் கடலில் விடப்பட்ட 172 ஆமைக் குஞ்சுகள்



கண்டகுழி வனஜீவராசிகள் திணைக்களத்தினரால் பராமரிக்கப்பட்டு வந்த ஆமைக் குஞ்சுகள் சனிக்கிழமை இரவு சுற்றுலாப் பயணிகளால் கடலில் விடப்பட்டன.

கண்டகுழி கடற்கரையில் இடப்படும் முட்டைகளை வனஜீவராசிகள் திணைக்களத்தினர் பாதுகாப்பாக சேகரித்து ஆமைக் குஞ்சுகளாக மாறிய பின்னர் அவை கடற்கரையில் விடப்பட்டன.

இந்த நிலையில் கடந்த மாதம் ஆமை முட்டைகளை சேகரித்து பராமரிப்பு நிலையத்தில் வைக்கப்பட்டதன் பின்னர் 45 நாள்களின் பின்னர் முட்டையிலிருந்து 172 ஆமைக் குஞ்சுகள் பிறந்தன என வனஜீவராசிகள் திணைக்களத்தினர் தெரிவித்தனர். இதன்போது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் ஆமைப் பராமரிப்பு நிலையத்திற்குச் சென்று குறித்த ஆமைக் குஞ்சுகளை பாதுகாப்பாக கடலில் விட்டனர். குறித்த கடலாமை அரியவகையான மஞ்சள் நிறச் சிற்றாமை வகையச் சார்ந்தது என கண்டகுழி வனஜீவராசிகள் திணைக்களத்தினர் தெரிவித்தனர். (05)

# கல்முனை தமிழ் மக்களுக்கும் ஈஸ்டர் தாக்குதலுக்கும் நீதி கிட்டவில்லை

## போதகர் ஏ.கிருபைராஜா வேதனை

(வி.ரி.சகாதேவராஜா)




ஐந்து வருடங்களுக்கு முன்னர் ஈஸ்டர் தினத்தில் இடம்பெற்ற பயங்கரவாத செயலுக்கு இலங்கை அரசாங்கம் இதுவரை உரிய நீதியை பெற்றுத்தரவில்லை. அதேபோல கல்முனை தமிழ் மக்களுக்கும் நீதி கிடைக்கவில்லை. இனியும் காலம் தாழ்த்தாது அரசு நீதி வழங்கவேண்டும்.

கல்முனை பிரதேச கிறிஸ்த்தவ மக்கள் சார்பாக கல்முனை மத போதகர் ஏ. கிருபைராஜா ஈஸ்டர் தினத்தில் தனது கருத்தைத் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலுக்கு நீதி கோரி ஞாயிற்றுக்கிழமை கல்முனையில் கிறிஸ்த்தவ மக்களால் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதில் கலந்துகொண்டு அவர் மேலும் தெரிவிக்கையில் -

நீதி மன்றங்களில் அதற்கான நீதியை விரைவாக கிடைக்க எதிர்பார்க்கின்றோம். இந்தக் கருத்தைப் பதிவு செய்துகொண்டிருக்கும் போது கல்முனை பிரதான வீதியில் இருந்து இன்னுமொரு மன வேதனையான விடயத்தையும் காண்கின்றேன். கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்கு இழைக்கப்படும் அநீதிக்கு நீதி கோரி மக்கள் ஏழாவது நாளாகப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதுவரை பொறுப்பு வாயந்த அதிகாரிகளிடம் இருந்தோ அரசிடம் இருந்தோ உரிய பதில் கிடைக்கவில்லை . மக்கள் வெயிலிலும், மழையிலும் தங்கள் நீதிக்காக போராடி வருகின்றார். இந்த மக்களின் கோரிக்கை நியாயமானது என்பது நாடறிந்த விடயம் இருந்தும் கடந்த 30 வருடங்களுக்கு மேலாக இந்த மக்களுக்கான நீதியும் மறுக்கப்பட்டு வருகின்றது. கல்முனை வடக்கு பிரதேச மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என இந்த உயிர்த்த ஞாயிறு தினத்தில் அரசாங்கத்தை அன்பாக கேட்டுக்கொள்கின்றோம்.

சில வருடங்களின் முன்பும் சாகும் வரை உண்ணாவிரத போராட்டம் மேற்கொள்ளப்பட்டபோது அரசாங்கத்தாலும் , அரச அதிகாரிகளாலும் , மதகுருக்களாலும் வாக்குறுதிகள் வழங்கப்பட்டன. ஆனால் எதுவும் நடைபெறவில்லை. இனங்களுக்கிடையில் பரிவினையை ஏற்படுத்தி கல்முனை வடக்கு பிரதேச மக்களுக்கு அநீதி செய்து இனமுறுகலை ஏற்படுத்தும் அரசியல்வாதிகளுக்கு இடமளியாது இதற்குரிய தீர்வை அனைவரும் இணைந்து பெற்றுத்தர வேண்டும். - என்றார். 05)

# ஆயுர் வேத வைத்தியசாலைகளில் மருந்துக்களுக்குத் தட்டுப்பாடு

## கிளிநொச்சி மாவட்டத்தில்

கிளிநொச்சியில் ஆயுர் வைத்தியசாலைகளில் மருந்துகளுக்கு கடும் தட்டுப்பாடு நிலவுகின்றது என பொது மக்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆயுர் வேத சிகிச்சைகளுக்கு செல்லும் நோயாளிகளுக்கு மருந்துகளை வெளியில் பெற்றுக்கொள்ளுமாறு மருத்துவர்கள் பரிந்துரைப்பதாகவும் பொருளாதார நெருக்கடி காரணமாக பெரும்பாலான பொது மக்கள் மருந்துகளைக் கொள்வனவு செய்ய முடியாத நிலையில் இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சம்மந்தப்பட்ட வைத்தியர்களை தொடர்புகொண்டு வினவிய போது கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாக 50 வீதமான மருந்துக்களுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது எனவும் கொழும்பிலிருந்து தங்களுக்கு உரிய மருந்து கிடைக்கப்பெறவில்லை என்றும் தெரிவித்த அவர்கள், இதன் காரணமாக மாதாந்தம் தங்களிடம் சிகிச்சைக்காக வருகின்ற பொது மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் குறிப்பிட்டுள்ளனர். (05)

# குற்றச்செயல்களுடன் தொடர்புடைய தேரர் உட்பட ஆறு பேர் கைதாகினர்



ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் தேரர் உட்பட 6 பேர் ஞாயிற்றுக்கிழமை குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் காலி பகுதியிலுள்ள விஹாரையில் வசிக்கும் 43 வயதுடைய தேரர் ஒருவர், பலபிட்டிய பகுதியை சேர்ந்த 49 வயதுடைய ஒருவர் , மினுவாங்கொடை பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய ஒருவர் , கம்பஹா பகுதியை சேர்ந்த 31 வயதுடைய ஒருவர் , இரத்மலானை பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயதுடைய ஒருவர், சபுகஸ்கந்த பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் கைதான சந்தேக நபர்களுக்கு ஆதரவாக இருந்த மேலும் மூன்று சந்தேக நபர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தமை குறிப்பிடத்தக கது. (05)

# உரிமை வேலைத்திட்ட கௌரவிப்பு சம்மாந்துறை செயலகம் முதலிடம்

(சர்ஜ/ன் லாபீர்)




ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் எண்ணத்தில் உருவான உரிமை தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் அரச காணிகளை நிபந்தனையற்ற ரீதியில் சுதந்திரமான முறையில் பூரண உரிமையாக அளிப்பு விடயத்தில் அகில இலங்கை ரீதியாக சம்மாந்துறை பிரதேசம் முதலிடம் பெற்றுள்ளது. அண்மையில் தம்புளையில் இடம்பெற்ற நிகழ்வில் இதற்கு சான்றுப்பத்திரம் ஜனாதிபதியால் வழங்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

இந்த வேலைத் திட்டத்தை வெற்றிபெற பல வகையிலும் உதவி ஒத்தாசை வழங்கிய சம்மாந்துறை பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு நேற்று (திங்கட்கிழமை) பிரதேச செயலாளர் எம்.எச் முஹம்மது ஹனீபா தலைமையில் மெச்சுரை பத்திரம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந் நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் யூ.எம் அஸ்லம், நிர்வாக உத்தியோகத்தர் ஜே.எம்.ஜெமில், மேலதிக மாவட்ட பதிவாளர் ஏ.கே.ரினோஸா, பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர் எப்.சாஹீனா, கிராம நிர்வாக உத்தியோகத்தர் எம்.எல்.எம் தாஸீம், உட்பட காரியாலய உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (05)

# சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்ட கைதி ஒருவர் வைத்தியசாலையில் சாவு

## வவுனியாவில் சம்பவம்

*வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவர் வவுனியா வைத்தியசாலையில் ஞாயிற்றுக்கிழமை மாலை மரணமடைந்துள்ளார்.*

*குற்றச் செயல் ஒன்று தொடர பில் வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவருக்கு உடல் நலக் குறைவு ஏற்பட்டதையடுத்து சிறைச்சாலை உத்தியோகத்தர்களால் வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.*

*வைத்தியசாலையில் குறித்த கைதிக்கு சிகிச்சை வழங்கப்பட்ட போதும் அவர் சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார். மாரடைப்பு காரணமாகவே குறித்த மரணம் இடம்பெற்றுள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். ஜாஎல பகுதியைச் சேர்ந்த 34 வயது இளைஞரே இவ்வாறு மரணமடைந்த வராவார்.*

*மேற்படி சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.*

*(05 - 100)*

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## பாடசாலை மாணவர்கள் விடயத்தில் காவல்துறையினருக்கு கவனம் தேவை

தெல்லிப்பளை யூனியக் கல்லூரியின் மெய்வன்மைப் போட்டியில்மாணவர்கள்செய்திருந்த இல்லஅலங்காரங்கள் தொடர்பில் காவல்துறையினர் தன்னிச்சையாக விசாரணைகளைத் தொடக்கி இருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்துகின்றது. பாடசாலைகளுக்குள் இதுபோன்ற தேவையற்ற தலையீடுகளைப் பொலிஸார் உடனடியாக நிறுத்துவதுடன் மாணவர்களைப் பயங்கரவாதிகளாக முத்திரைகுத்துவதன் மூலம் மீண்டும் வரலாற்றைத் திரும்பச் செய்வதையும் தவிர்க்கவேண்டும்.

பாடசாலையின் மெய்வன்மைப் போட்டியில் இரு இலங்களுக்குச் செய்யப்பட்ட அலங்காரங்கள் தொடர்பிலேயே காவல்துறையினர் விசாரணைகளைத் தொடக்கி இருக்கின்றனர். அவற்றில் ஒன்று கார்த்திகைப் பூ எனப்படும் காந்தள் பூ வடிவமைப்பிலானது. மற்றையது போர்த் டாங்கி வடிவிலானது. இந்த இரு வடிவங்களும் ஏன் செய்யப்பட்டன என்பதும் இதனைச் செய்யும்படி மாணவர்களைஊக்குவித்தவர்கள்ஆசிரியர்களாஎன்பதும் காவல்துறையினரின் கரிசனைக்குரிய விடயங்களாக இருந்தன என்று தெரிகின்றது.

மெய்வன்மைப்போட்டிநடந்துகொண்டிருந்தபோதேபடையப் புலனாய்வாளர்கள் என்று கருதப்படுவோரால் இந்த இல்ல அலங்காரங்கள் ஒளிப்படங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்றுபாடசாலைத்தகவல்கள்கூறுகின்றன. அதுமட்டுமன்றி சமூக ஊடகங்களான முகப் புத்தகம் (பேஸ் புக்), புலனம் (வட்ஸ்அப்) ஆகியவற்றுக்கூடாகத் தீவிரமாகப் பரவியதும் இந்த விசாரணைக்கான முக்கிய காரணங்களில் ஒன்று. பாடசாலை நிகழ்வு ஒன்றுக்குள், முறைப்பாடுகள் எதுவுமின்றி காவல்துறையினர் மூக்கை நுழைத்து அதிபர், மாணவர்களை பொலிஸ் நிலையம் அழைத்து விசாரணைநடத்திவாக்குமூலங்களைப்பதிவுசெய்திருப்பது அதிகப்பிரசங்கித்தனமானது.

அதுமட்டுமன்றி பாடசாலை மாணவர்களைப் பயங்கரவாதச் சந்தேகக் கண்கொண்டு நோக்குவதும் விசாரணை நடத்துவதும் பாரதூரமான எதிர்வினைகளைத் தூண்டக்கூடியது. காவல்துறையின் இத்தகைய மனோநிலையும் அணுகுமுறையும் இளைஞர்கள் மீதான அடக்குமுறையும்தான் கடந்த காலங்களில் ஆயுதப் போராட்டம் தீவிரமடைவதற்கான காரணங்களில் ஒன்றாக இருந்தது என்பதை யாரும் மறந்துவிடக்கூடாது. பாடசாலை மாணவர்களிடம் பயங்கரவாதிகளைத் தேடும் காவல்துறையினரின் இதுபோன்ற சம்பவங்கள் எதிர்வன்முறை நோக்கி அவர்களைத் தள்ளிவிடாமல் இருக்கவேண்டும்.

அதுவும்போக கார்த்திகைப் பூ என்பது ஒரு அமைப்பால் பயன்படுத்தப்பட்டது எனபதற்காக அது அந்த அமைப்புக்குச் சொந்தமானது என்று பொருள் அல்ல. அந்தப் பூ இயற்கையானது, அனைவருக்கும் பொதுவானது. அதனைப் பயன்படுத்தவும் மீளருவாக்கம் செய்வதற்கும், காட்சிப்படுத்துவதற்கும் அனைவருக்கும் உரிமையுண்டு. அதேபோன்று யூனியன் கல்லூரியின் அமைவிடம் போரால் நீண்ட காலம் கையகப்படுத்தப்பட்டிருந்த பகுதி. அங்கு இன்னமும் படையினரின் அதிகரித்த நடமாட்டம் இருக்கின்றது. அண்டை அயல் பகுதிகள் இன்னும் படையினரால் கையகப்படுத்தப்பட்டே இருக்கின்றன. இந்தச் சூழலுக்குள்வாழும்மாணவர்கள்மத்தியில்போர்க்கருவிகள் பற்றிய ஈர்ப்பு நியாயம் மிக்கதே. அப்படியிருக்கும்போது அதற்காக அவர்களை அழைத்து விசாரிப்பது என்பது பொருத்தமான செயற்பாடல்ல.

எல்லாவற்றுக்கும்மேலாகஅவர்கள்தவறுஇழைத்தார்கள் என்று கருதப்பட்டால் அதனைக் கையாள்வதற்கு கல்வித் திணைக்களம், மாகாணக் கல்வித் திணைக்களம், கல்வி அமைச்சு என்று பலவும் இருக்கையில் மாணவர்களைக் குற்றவாளிகள் போன்று காவல் நிலையத்திற்கு அழைத்து விசாரிப்பதும் வாக்குமூலம் பதிவதும் ஏற்புடையதும் அல்ல நல்லதுமல்ல. இதுபோன்ற விடயங்களில் பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி காவல்துறையினரும் படையினரும் அவசரப்படுவதைவிடவும் எதிர்காலத்தைக் கருத்தில்கொண்டு நிதானமாகவும் பொறுமையுடனும் நடந்துகொள்வதே முக்கியமானது.

# கற்பகதரு என்னும் அற்புதம்

## இரும்பாயமையும் எங்கள் பனை

அங்கம் – 35



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா.



வடலியாக இருந்து வளர்ந்து பனையாகி வந்தபின்னர் கெ-ாடுக்கும் அத்தனையையும் பனையென்னும் கற்பகதரு கொடுத்தபடியே இருக்கும். கே-ளாமல் கொடுக்கும் வள்ளல் தன்மையினைப் பனை கொண்டிருப்பதால் அது மரங்களுக்களுக் குள்ளேயே உயர்வானதாகவே நிமிர்ந்து நிற்கிறது எனலாம். தனது அடி முதல் நுனிவரை அமைந்து காணப்படும் பகுதி-களில் என்னென்ன பலன் இருப்-பதாகக்



கருதுகி-றீர்களோ அவைகள் அத்தனையையும் தாரா-ளமாகவே எடுத்துக் கொள்ளுங்கள் என்று திறந்த மனத்தோடு தெரிவித்து மிகவும் தெளிவாய் இருப்பதுதான் பனை எனலாம். " செத்தும் கொடுத்தான் சீதக்காதி " என்று ஒரு சொல்லுவது பழக்கத்தில் இருப்பதை யாவரும் அறிவோம்.

சீதக்காதி என்பவர் தனது வாழ்நாளெல்லாம் வரையாது வழங்கினார் என்றும் அறிகின்றே-றாம்.அவரிடம் வருவோர்களை மதம் பாராது, இனம் பாராது , கொடுத்தபடியே இருப்பாராம். அவரிடம் உதவிகேட்டு வந்த வருக்குப் பொருள் கொடுத்த போது அவர் அதனை பின்பு வந்து பெற்றுக்கொள்ளுவ தாகக் கூறி நன்றி சொல்லிச் சென்றுள்ளார். அவருக்கு பொருள் தேவையான வேளை சீதக்காதியை நாடி வந்திருக்கிறார். அதற்குள் சீதக்காதி வள்ளலோ இறந்து விட்டார். வந்தவரே கவலையுடன் அவரின் சமாதிக்குச் சென்று மரி யாதை செலுத்தலாம் என்று உறவு-களுடன் சென்றிருக்கிறார். அப்பொழுது அங்கே ஒரு அதிசயம் நடந்த தாம்.சீதக்காதியின் சமாதியிலிருந்து அவரது ஒரு கை மேலே எழுந்ததாம். அந்தக் கையில் ஒரு விரலில் விலைமதிப்பான மோதிரம் இருந்ததாம். உறவினர் அந்த மோ-திரத்தை எடுத்து வந்தவரிடம் கொடுத்தார் களாம் என்பதுதான் அந்த அதிசய சம்பவமாகும். செத்-தாலும் வள்ளல் தன்மை மட்டும் உயிர்த்துடிப்புடன் இருந்திருக்கிறது என்பதுதான் இங்கு முக்கியத்துவப் படுத்தப்படுகிறது எனலாம். பனைக்கும் இச்சம்பவத்தும் என்னதான் தொடர்பு இருக்கிறது என்று எண்ணிடத் தோன்றுகிறதல்லவா ? பனையா-னது உயிர் ப்புடன் இருக்கும் பொழுது கொடுத்து உதவியது. அது உயிர்ப்பு அற்று பட்ட மரமாகிய பின்பும் பயனைக் கொடுக்கும் வகையிலும் இருக்கிறது என்பது தான் இங்கு தொடர்பாக அமைகிறது.

பட்டபின் பனையினைக் கொட்டுப்பனை என்று அழைக்கிறோம்.குருத்து விழுந்தும்,காய்ந்தும் , நிற்கும் நிலைதான் இந்தக் கொட்டுப்பனையாகும். கொட்டுப் பனைகளை அளவான துண்டுகளாக வெட்டி அதனை மண்ணில் கிண்டி வைத்து அதன் மேல் பகுதியில் ஆல்,அரசு , மரக் கன்றுகளைப் பதியம் இடுவதையும் காணலாம். நான் எனது சிறிய பராயத்தில் இப்படிச் செய்திருக்கிறேன். நான் பதியம் வைத்த ஆலும் , அர சும் வளர்ந்து பெரிய மரமாக யாழ் மண்ணில் இருக்கிறது. பனங்கொட்டு தன்னை ஆகுதியாக்கி மரங்களை விருட்சமாக்கி விட்டு போய்விட்டது.

கார்த்திகைத் தீபத்திருநாளில் சொக்கப்பனை எரித்தல் என்பது கிராமங்களிலுள்ள ஆலயங்களில் இடம் பெறும் என்பதையும் யாவரும் அறிவோம். அப்பொழுது கொட்டுப் பனைகளே இந்தச் சொக்க-ப்பனையாக அமைந்து நின்று தீயில் தன்னைத் தியாகம் செய்து நிற்கும். கொழுந்து விட்டு மேல் நோக்கி எரியும் நெரு ப்பினைப் பார்த்து யா-வருமே ஆரவாரித்து நிற்பார்கள். கொட்டுப்பனை தன்னை எங்களின் விருப்பத்து க்காகத் தீயினை அணைத்தபடி இருக்கும்.

கொட்டுப் பனைகள் மனிதருக்கு மட்டுமல்லாது பறவைகளுக்கும் உதவியாக இருக்கிறது என்பதும் நோக் கத்தக்கதாகும்.பச்சைக்கிளிகளும், மைனாக்களு ம் , கூகைகளும் , தாம் வாழுவதற்கு மிகவும் பாதுகாப் பான இட மென்று தேர்ந்தெடுத்த இடம் எது தெரியுமா அதுதான் கொட்டுப்பனையாகும்.

**திங்களுக்குச் செல்லப் பனாட்பாகுஞ் சீருணவு**
**மங்காப் பனையீயு மாண்டு முற்றுந் – தங்குபுகழ்**
**பாரிபோல் யார்க்கும் பயனருளித் தன்னையுமே**
**நேருங் கொடையாக நின்றுதவுஞ் – சீரியநற்**
**கற்பக மன்னன் கடவுட் பனையுணவை**

என்னும் இப்பாடல் மூலம் பனையின் வள்ளல் தன்மையானது , கொடு த்துக் கொடுத்துப் புகழ்பெற்ற பாரி மன்னனுடன் இணைக்கப்படு கிறது. காய்ந்த பின்பும் பனையின் அளிக்கின்ற

(5ஆம் பக்கம் பார்க்க...)

காலைக்கதிர் Kalaikkathir

# கற்பகதரு என்னும் அற்புதம்.....................

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)வளளல் தனம் குறைந்து போய்விடவே இல்லை எனக்காட்டுவது பனையின் பெருமையினைப் பறிசாற்றி நிற்கிறதல்லவா!

காய்ந்து போயிருக்கும் பனைமரத்தினைச் சங்கப் புலவர் ஒருவர் பார்க்கிறார். அவரின் பார்வை நல்ல தொரு கவியாகி நமையெல்லாம் ஈர்க்க வைக்கிறது.

**நீடலர் வாழி , தோழி ! கோடையில்**
**குருத்து இறுபு உக்க வருத்தம் சொலாது**
**தும்புடைத் துய்த் தலைக் கூம்பு திரங்கிய**
**வேனில் , வெளிற்றுப் பனை போலக் கை எடுத்து**
**யானைப் பெரு நிரை வானம் பயிரும்**

இப்பாடல் அகநாநூற்றில் இடம் பெறுகிறது. பாடலைப் பார்க்கக் குழப்பமாக இருக்கிறதா ? காய்ந்த பனை இங்கே எப்படிக் காட்டப்படுகிறது என்றும் எண்ணிடத் தோன்றுதல்லவா ? இதுதான் சங்கப்பாடலின் நுட்ப மாகும். பாடலின் உள்நுழைந்து பார்ப்போமா ! வேனிற் காலத்தில் அங்கு அடிக்கின்ற மேல் காற்றின் கார ணத்தால் குருத்துகள் இற்று உதிர்ந்த நிலையில் பனை மரம் இருக்கிறதாம்.அந்த பனை மரத்தின் நுனியில் துளையுடன் உச் சியானது கூம்பிய வற்றிய நிலையில் அந்த இளம் பனைமரம் தென்படுகிறதாம். அந்தப் பனைமரம் போன்று பெருங்கூட்டமாக வரும் யானைகளின் தும்பிக்கை இருக்கிறதாம். யானைகள் தும்பி க்கையினை உயர்த்தியபடியே வருகின்றனவாம்.அது பனைமரம் போல் சங்கப் புலவருக்குத் தென்படுகிற தாம்.குருத்தானது இற்று நுனியில் துளையுடன் காணப்படும் பனையினைப்பற்றிய கற்பனை சங்கப்புல வரிடம் வளர்ந்து கொண்டே போகிறது. இடி இடித்து நிற்கும் அளவுக்கு தன்னுடைய பிளிறலை எழுப்பும் யானையின் தும்பிக்கையின் வெளிறிய நிறமும், அதன் தும்பிக்கையின் முனை உள்ள அமைப்புக்களையும் - குருத்துதிர்ந்து நிற்கின்ற பனையில் இந்தச் சங்கப்புலவர் காணுகிறார். இப்படிக் காணும் நிலை சற்று வித்தியாசமாக இருக்கிறதல்லவா ? சங்ககாலத்திலும் பட்ட பனை வியந்து பார்க்கப்பட் டிருப்பதோடு - ஒரு புலவனுக்குப் பாடு பொருளாகவும் ஆகியிருக்கிறது என்று எண்ணுகையில் பனை யானது முன்னுக்கே வந்து நிற்கிறது என்று தானே எண்ணிட வைக்கிறதல்லவா !

கிளி, குருவி, மைனா, கூகை, பருந்து, அனில், ஓணான், என்பன தங்களி ளுக்குப் பொருத்தமான வாழ் விடமாகவும் கொட்டுப்பனையினை ஆக்கியும் இருக்கின்றன. ஆடு, மாடுகளைக் கொட்டுப்பனைகளில் கட் டுவார்கள்.





மாடு களுக்கு அவற்றின் உடலில் அரிப்பு எடுத்தால் , அவைகள் அந்த அரிப்புக்கு இதமாக கொட்டுப்பனையினை நாடி உரசி அரிப்பினைப் போக்கிக்கொள் ளுவதையும் காணக்கூடியதாகவும் இருக்கும்.

வடலிப்பருவமாக இருக்கும் பொழுது அதனுடைய குருத்தானது காய்ந்து விழுவதைக்காணலாம். அப் படிக் குருத்து விழுந்த அந்த வடலிப்பனைகள் விறகினுக்காய் பயன்படுத்தப்படுத்தப்படுகின்றன. அதே வேளை வடலி அல்லாமல் நன்கு வளர்ந்து முதிர்வாக இருக்கும் பனையிலிருந்து குருத்து விழுந்த காய்ந்த மரம் பய னுள்ளதாகவே இருக்கி றது என்பதும் நோக்கத் தக்கதாகும். அதாவது பச்சையாக இருந்து வெட்டப்பட்ட மரம் எந்தளவுக்குப் பயனாகி நிற்கின்றதோ அதே அளவுக்கும் இப்படியான நிலையில் இருக்கின்ற பனை மரமும் உதவியே நிற்கிறது என்பதுதான் முக்கியமாகும்.

பட்ட பனையாகிய கொட்டுப்பனையினைப் பிளந்து பின் அதனைச் சீவி பலவகைகளில் பயன்படுத்து கிறார்கள். துண்டாக்கப்பட்ட பிளந்த பனை மரத்துண்டுகளை அளவாக வெட்டி எடுத்து வீட்டுக்கும், தோட் டங்களுக்கும், பாதுகாப்பாய் வேலி அடைக்கவும் பயன் படுத்துவதையும் காணக் கூடியதாகவும் இருக் கிறது.மாடுகள் ஆடுகள் கட்டுகின்ற இடங்களில் சிறிய கொட்டில்களை அமைக்கவும் பிளக்கப்பட்ட இந்தக் கொட்டுப்பனையின் துண்டுகள் கை கொடுத்து நிற்கின்றன.கிராமப் புறங்களில் ஒழுங்கான பதை அமைப்பு என்பது இருப்பது மிகவும் குறைவாகவே இருக்கும். இருக்கும் ஒரு பாதையினைப் பயன் படுத் தியே பிரதான பாதைக்கு வருகின்ற நிலைமை பல கிராமங்களில் இருக்கிறது. அந்த நிலை இன்னுமே தொடர்வதையும் கானக்கூடியாதகவும் இருக்கிறது.பிரதான பாதைக்கு வருகின்ற பொழுது அப்பாதை களின் குறுக்கே பள்ளமாய் இருக்கும் இடத்தில் மாரிகாலங்களில் நீர் நிரம்பி செல்லமுடியா நிலையும் ஏற்படும். அந்த இடத்தில் ஒரு சின்னப்பாலம் அமைக்க வேண்டியும் ஏற்படும். அப்பொழுது கொட்டுப்பனையினைப் பிளந்த துண்டுகள் கைகொடுக்க வந்து நிற்கும். நடக்கும் பாதாஇயின் அகலத்துக்கு ஏற்ப நீரோடும் பகுதிக்கு மேலாக பிளந்த பனந்த டிகள் அலவாக வெட்டப்பட்டு அங்கே ஒழுங்காக வைக்க ப்படும். அவ்வாறு வைக்கப்பட்ட பனந்தடிகளின் மேலாக நடந்து போவது இலகுவானதாகவே இருக்கும். தலைச்சுமைகளைச் சுமந்து பிரதான வீதிக்கு வருவதும் இயலக் கூடியதாகவும் இருக்கும்.

சில கொட்டுப்பனைகளில் வைரம் இல்லாமலும் இருக்கும். அப்படியான கொட்டுப்பனைகளும் எப்படி யோதான் பயனைக் கொடுத்து நிற்கிறது என்பது நோக்கத்தக்கது. எதுவும் செய்ய முடியா அளவுக்கு வைரம் சிறிதளவுக்காயினும் இல்லா நிலையில் விறகாக வந்து பயனாகி நிற்கும் என்பதும் கருத்திருத்த வேண்டியதேயாகும்." செத்தும் கொடுத்தான் சீதக்காதி " என்பதைப் பனை நிஷரூபித்த படியேதான் இருக்கும்.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swahpoes Tin - 250/=
Coca Cola Tin - 250/=

## பெண்கள் அபிவிருத்தி கூட்டுறவு அமைப்பு கற்பிட்டிப் பிரதேசத்தில் ஆரம்பித்துவைப்பு

(எம்.எச்.எம் சியாஜ்)

பெண்கள் நுன் கடன் திட்டங்களில் சிக்குண்டு மனநிலை பாதிக்கப்படும் நிலை அதிகரித்துள்ளது இவர்களை மீட்டெடுப்பதை பிரதான நோக்காக கொண்டு கற்பிட்டி பிரதேசத்தின் பெண்களை மையப்படுத்தி கற்பிட்டி பிரதேச பெண்கள் அபிவிருத்தி கூட்டுறவு அமைப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி அமைப்பு சகல மதங்களையும் சேர்ந்தவர்களையும் உள்ளடக்கியதாக தற்போது சுமார் 500 பெண்கள் அங்கம் வகிப்பதாகவும் இது இவ்வருட இறுதிக்குள் 2000 பெண்களாக அதிகரிக்கப்படும் எனவும் எதிர்காலத்தில் 10,000 பெண்களை இவ் அமைப்புக்குள் உள்வாங்குவதற்கு திட்டமிட்டுள்ளதாகவும் கற்பிட்டி பிரதேச பெண்கள் அபிவிருத்தி கூட்டுறவு அமைப்பின் தலைவி ஏ.சீ.எஸ் றுவைஸா தெரிவித்தார்.

மேலும் இவ் அமைப்பின் ஊடாக சுய நம்பிக்கைக் குழு மற்றும் சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் அதன் அங்கத்தவர்கள் மூலம் சேமிக்கப்படும் பணம் அவர்களுக்கிடையில் வட்டி இல்லா சிறு கடன் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றதாகவும் அத்தோடு சிறுவர்கள், பெண்கள் தொடர்பான பாதுகாப்பு நடவடிக்கைகள் அது தொடர்பான விழிப்புணர்வுகள், பிறப்பு சான்றிதழ் பதியப்படாதவர்களை பதிவு செய்வதற்கான வழிகாட்டல்கள், பாடசாலை கல்வியை இடைநடுவில் கைவிட்ட சிறுவர்களை அக் கல்வி நடவடிக்கைகளை தொடர்வதற்கான வழிகாட்டல்கள் என்பவற்றுடன் , பெண்களின் சுயமான சேமிப்பு பழக்கத்தை ஊக்கப்படுத்தி சிறு சிறு வியாபார நடவடிக்கைகள் எவ்வாறு மேற்கொள்ளவது மற்றும் உற்பத்தி பொருள்களை சந்தைப்படுத்தல், வெளிப் பிரதேச பெண்கள் கூட்டுறவு அமைப்புகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தி தமது பொருட் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கான செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் மேற்படி முழுச் செயற்பாட்டிற்குமான நிகழ்ச்சித் திட்டங்களையும் அனுசரணைகளையும் கற்பிட்டி மனிதாபிமான சகோதரத்துவ நிறுவனமும் அதன் செயற்த்திட்ட பணிப்பாளரும் நிறைவேற்றுக் குழுச் செயலாளர் ஏ.எம்.எம் ம/ர் அவர்களும் முழுமையா வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது எனவும் தெரிவித்தார். (05)

# இரு மோட்டார் சைக்கிள்கள் மோதியதில் பாடசாலை மாணவன் உட்பட இருவர் சாவு

பரகஹதெனிய - புஸ்வெல்ல வீதியின் சிங்கபுர பிரதேசத்தில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதியதில் பாடசாலை மாணவர் ஒருவர் சம்பவ இடத்தில் பலியானதுடன் மேலும் ஒருவர் வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

பரகஹதெனிய பகுதியிலிருந்து புஸ்வெல்லவை நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள், எதிர்த்திசையில் வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் படுகாயமடைந்த இரு மோட்டார் சைக்கிள்களில் பயணித்தவர்களையும் பின்னால் சென்றவர்களையும் மாவத்தகம வைத்திய சாலையில் சேர்த்தபோது சாரதி ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

சிங்கபுர பரகஹதெனிய பிரதேசத்தைச் சேர்ந்த 14 வயதுடைய பாடசாலை மாணவர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதுடன் காயமடைந்த ஏனையோர் மேலதிக சிகிச்சைக்காக குருணாகல் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (05)

## மாணவ, மாணவிகளின் இப்தார் நிகழ்வு

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சாய்ந்தமருது அல்ஹிலால் வித்தியாலயத்தின் கல்வி கற்ற புலமைப் பரிசில் 2011 ஆம் பிரிவு மாணவ, மாணவிகள் ஏற்பாடு செய்த இப்தார் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை மாளிகைக்காடு பாவா ரோயல் வரவேற்பு மண்டபத்தில் இடம்பெற்றது.

'நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து நீண்ட நாள்களாகிவிட்டது. எனவே மீண்டும் இணைவோம்' எனும் தொனிப்பொருளில் இடம்பெற்ற இந்த இப்தார் நிகழ்வுக்கு மயோன் குழுமத்தின் தலைவரும், ரிஸ்லி முஸ்தபா கல்வி உதவி மற்றும் சமூக சேவைகள் அமைப்பின் தலைவருமான எம். ரிஸ்லி முஸ்தபா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில், அல்ஹிலால் வித்தியாலயத்தின் அதிபர் யூ.எல். நஸார், ஓய்வு பெற்ற அதிபர்களான ஐ.எல்.ஏ. மஜீத், திருமதி எச்.ஏ. லத்தீப் பாடசாலையின் முன்னாள் அதிபர்களான ஏ.பி. முஜீன், எம்.எஸ்.எம். பைஷால் மற்றும் சாய்ந்தமருது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.எல். சம்சுதீன் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகவும் பாடசாலையின் முன்னாள் பிரதி அதிபர் எம்.சி.என். றிப்கா, பிரதி அதிபர் எம்.எச். நுஸ்ரத் மற்றும் ஓய்வு பெற்ற முன்னாள் பிரதி அதிபர்

ஐ.எல்.எம். மன்சூர் ஆகியோர் நிகழ்வில் கௌரவ அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

இதன்போது நிகழ்வில் கலந்து கொண்ட ஹிலாலியன்ஸ் புலமைப் பரிசில் - 2011 பிரிவு மாணவ, மாணவிகள் அனைவருக்கும் ஞாபகார்த்தமாக நினைவுச் சின்னங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (05)

## வைக்கோலுக்கு தீ வைக்க சென்றவர் அதில் சிக்கி தன் உயிரை மாய்த்தார்



தெஹியத்தகண்டிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சேருபிட்டிய பிரதேசத்தில் ஒருவர் தீயில் எரிந்து உயிரிழந்துள்ளார்.

செருபிட்டிய, தமனவெல பகுதியைச் சேர்ந்த 74 வயதான ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வயலில் வைக்கோலுக்கு தீ வைக்கப் போவதாகக் கூறிவிட்டு, வீட்டை விட்டு சென்றவர் வீடு திரும்பாததால் இவருடைய பேரன் வயலுக்கு தேடி சென்றுள்ளார்.

அப்போது குறித்த நபர் தீயில் சிக்கி எரிந்து உயிரிழந்ததாக தெரியவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)



## கச்சதீவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கச்சதீவுதாரைவார்க்கப்பட்டமை தொடர்பில் மக்களுக்கு அறிந்து கொள்கின்றஉரிமைஉள்ளதாலேயே நான் இந்த ஊடகவியலாளர் சந்திப்பை நடத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

தகவல் அறியும் சட்டத்தின் தகவல்களுக்குஅமைவாக1960ஆம் ஆண்டுகாலப்பகுதியில்கச்சதீவுமீது இந்தியாவுக்கேஉரிமைஉள்ளதென இந்தியாவின் அப்போதைய சட்டமா அதிபர் சேதல்வார் தெரிவித்துள்ளார்.

முன்னாள்பிரதமர்ஜவஹர்லால் நேரு கச்சதீவு என்ற சிறிய தீவு விடயத்துக்கு முக்கியத்துவம் அளிக்கப்போவதில்லைஎன்றும்அது தொடர்பில் பேசுவதில் பயனில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

1974ஆம்ஆண்டுஒப்பந்தத்துக்கு அமைவாக இந்திய மீனவர்களுக்கு கச்சதீவில் மீன்பிடிப்பதற்கு உரிமை உள்ளது. அதற்காக பயண ஆவணங்கள் தேவையில்லை என்று அந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் இரண்டு வருடங்களுக்கள் மற்றுமொரு ஒப்பந்தம் பரிமாறப்பட்டுள்ளது. அதில் இந்திய மீனவர்களும், அவர்களின் மீன்பிடி படகுகளும் இலங்கை கடற்பரப்பிலும் அதன் பிரத்தியேக பொருளாதார பகுதியிலும் இலங்கையின் அனுமதியின்றி மீன்பிடிப்பதற்கு அனுமதியில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த இருபது ஆண்டுகளில் 6184 இந்திய மீனவர்ளை இலங்கை அரசு கைது செய்துள்ளது. 1175 மீனவப்படகுகள் கைப்பற்றப்பட்டுள்ளன. கடந்த ஐந்து ஆண்டுகளாக நாடாளுமன்றத்தில் இது குறித்து பல்வேறு கட்சிகளாலும் குரல் எழுப்பப்பட்டுள்ளது.

தமிழக முதல்வர் எனக்கு பல சந்தர்ப்பங்களில் கடிதம் எழுதியுள்ளார். தற்போதைய முதலமைச்சர் ஸ்டாலினுக்கு மாத்திரம்21தடவைகள்நான்கச்சதீவு தொடர்பில் பதிலளித்துள்ளேன்.

கச்சதீவு விவகாரம் திடீரென்று எழுந்ததொன்று அல்ல. அது பல ஆண்டுகளாக இரு நாடுகளுக்கும் இடையில் காணப்படுகின்ற நேரடியானபிரச்சினையாகும். கடந்த பலவருடங்களாக இதுதொடர்பில் பேசப்படுகின்றது.

முன்னாள் இந்தியப் பிரதமர்கள் எவரும் கச்சதீவு தொடர்பில் கவலைப்படவில்லை. கச்சதீவு விடயத்தில் காங்கிரஸ் கட்;சியும், திராவிட முன்னேற்றக்கழகமும் தங்களுக்குளவ்விதமானபொறுப்பும் இல்லைஎன்றஅணுகுமுறையையே கடைப்பிடித்துள்ளன.

ஆனால் பிரதமர் மோடி தலைமையிலான ஆட்சி இந்த விடயத்தில் மிக முக்கிய கவனத்தினைக் கொண்டுள்ளது என்றார்.

## லிற்ரோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதன் புதிய விலையானது 4115 ரூபாயாகவும் 5 கிலோ எடையுடைய சமையல்எரிவாயு248ரூபாவினால் குறைக்கப்பட்டு 1,652 ரூபாயுக்கும், விற்றபனைசெய்யப்படவுள்துஎன்று அதன்நிறைவேற்றுஅதிகாரிகலாநிதி நிரோஷன் ஜே. பீரிஸ் தெரிவித்தார்.

அத்துடன் தமது நிறுவனத்துக்கு 30ஆயிரம் மெற்றிக் தொன்னை களஞ்சியப்படுத்துமளவிற்கு அம்பாந்தோட்டையில் களஞ்சிய வசதிஉள்ளது. இதுஆசியாவிலேயே மிகப்பெரியதொரு வரமாகும் என்றார்.

காலைக்கதிர்
ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



## யார் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விண்ணப்பித்த 34 இலட்சம் பேர் குறித்து மீண்டும் கணக்கெடுப்பு நடத்தப்படும் என்பதைக் கூற வேண்டும்.

மேலும், புதிதாக சமர்ப்பிக்கப்படும் 4 இலட்சம் விண்ணப்பங்கள் குறித்தும் முழுமையான கணக்கெடுப்பு நடத்தப்படும். இந்த கொடுப்பனவைப் பெறுவதற்கு தகுதியானவர்களைத் தேர்ந்தெடுக்கும் முறையை மேலும் வலுப்படுத்த நாங்கள் அவ்வாறு செய்கிறோம்.

24 இலட்சம் பயனாளிகளைத் தேர்வு செய்த பிறகு, அவர்கள் தொடர்பில் தொடர்ந்து மீளாய்வு செய்ய எதிர்பார்க்கிறோம். அஸ்வெசும மூலம் வழங்கப்பட்ட பணத்தை எதற்காக செலவு செய்தார்கள்? என்றும் இது எதிர்காலத்தில் வலுவூட்டும் திட்டத்திற்கு எந்த அளவிற்கு பங்களிக்கிறது மற்றும் இதன் ஊடாக அவர்களுக்கு என்ன பலன் கிடைத்தது என்பதில் சிறப்பு கவனம் செலுத்தப்படவுள்ளது.

தொடர்ந்து 6 காலாண்டுகளாக எதிர்மறையான பொருளாதார வளர்ச்சி விகிதத்தில் இருந்த நாட்டை நல்ல நிலைக்கு கொண்டு வர நாங்கள் உழைத்தோம். 2023ஆம் ஆண்டின் மூன்றாவது மற்றும் நான்காவது காலாண்டில் பொருளாதாரம் வளர்ச்சியடையத் தொடங்கியது. ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் ஆளும் தரப்பும் இணைந்து சர்வதேச நாணய நிதியம் மற்றும் ஏனைய நிதி வசதிகளை வழங்கும் நிறுவனங்களுடன் கைகோர்த்து செயற்பட முடியுமான நிதி ஒழுக்கத்துடன் நாட்டின் பொருளாதாரத்தை நகர்த்தியதன் காரணமாகவே இந்த நிலையை அடைய முடிந்தது. அதன்போது மக்களுக்கு சிரமங்கள் இருந்தாலும், தற்போது அந்த சிரமங்கள் படிப்படியாக குறைந்து வருகிறது.

அதன்படி, கடந்த மாதத்தில் பணவீக்கம் 0.9 சதவீதத்தினால் குறைந்துள்ளது. ரூபாயின் பெறுமதி மேலும் வலுவடைந்துள்ளது. அதன் பலன்களை நுகர்வோருக்கு வழங்கத் தேவையான பின்னணி உருவாகி வருகிறது. இன்றைய நிலவரப்படி, விலைகள் நிலையாக உள்ளன.

பொருளாதாரம் தொடர்பாக, பல்வேறு நபர்கள் சில விடயங்களை குறிப்பிட்டு, பல்வேறு விமர்சனங்களை முன்வைத்தனர். ஆனால் அவைகள் நியாயமானவைகள் அல்ல என்பது நாட்டு மக்களுக்கு நிரூபிக்கப்பட்டுள்ளது. பொருளாதாரத்தை மீட்டெடுக்க ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வழங்கிய தலைமைத்துவத்தைப் பாராட்ட வேண்டும்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கு மிகவும் திறமையான மற்றும் பொருத்தமான தலைவர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க என்பதை இதுவரை அடைந்துள்ள முன்னேற்றம் உறுதிப்படுத்துகிறது. பொருளாதார நெருக்கடியை மிகவும் திறமையாக சமாளித்தார். எனவே, அவரது தலைமை தொடர்ந்தும் நாட்டுக்குத் தேவை.

நாடு இதுவரை அடைந்துள்ள முன்னேற்றத்தைப் பார்க்கும்போது, நாட்டை யார் வேண்டுமானாலும் ஆளலாம் என்று சிலர் ஆசைப்படுகிறார்கள். ஆனால் அது தவறான எண்ணம் என்பதைக் கூற வேண்டும். இப்போது நாடு இயல்பு நிலைக்குத் திரும்பியிருப்பதால் சிலர் இப்படி நம்பலாம். ஆனால் அப்படி ஒரு நிலை இதுவரை இல்லை. தற்போதைய ஸ்திரத்தன்மை மிகச் சிறந்த முகாமைத்துவம், நேரடி முடிவெடுத்தல் மற்றும் சர்வதேச நம்பிக்கையைப் பெறுவதன் மூலம் அடையப்பட்டுள்ளது.

ஆனால் அது யாராலும் செய்யக் கூடிய காரியம் அல்ல. தற்போதைய திட்டத்தைத் தொடர்ந்தால், 2024ஆம் ஆண்டில் 2 சதவீதத்துக்கும் அதிகமான பொருளாதார வளர்ச்சியை எட்ட முடியும் என்ற வலுவான நம்பிக்கை உள்ளது. மேலும், பணமாற்று விகிதம் வலுவாக இருந்தும், பணவீக்கம் 70 சதவீதத்தில் இருந்து 5 சதவீதமாக குறைந்தாலும், விலை குறைப்பின் பலன் கிடைக்கவில்லை என மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

கறுப்புச் சந்தை விலையைக் கட்டுப்பாட்டுக்கு உட்படுத்தாததால் இது நடந்தது என்பதைக் குறிப்பிட வேண்டும். இதன் அடிப்படையில் அடுத்த வாரம் முதல் வாரந்தோறும் மொத்த விற்பனை விலையை பொதுமக்களுக்கு அறிவிக்க வர்த்தக அமைச்சர் முடிவு செய்துள்ளார். அதன் பிறகு சில்லறை விலைகள் குறித்து மக்கள் புரிந்து கொள்ள முடியும்.

மேலும், கடன் மறுசீரமைப்புத் திட்டம் இன்று பெரும் முன்னேற்றம் கண்டுள்ளது. சர்வதேச நாணய நிதியத்துடனான இரண்டாவது மறுஆய்வு இரண்டு வாரங்களுக்கு முன்பு முடிந்தது. தற்போது பணிக்குழாம் மட்டத்தில் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. இது மூன்றாவது தவணையைப் பெறுவதற்கு பெரிதும் ஆதரவளிக்கும் - என்றார்.






காலைக்கதிர் Kalaikkathir

# தொண்டர் ஆசிரியர் நியமனம் கோரி திருகோணமலையில் போராட்டம்





(ஹஸ்பர் ஏ.எச்)

தொண்டர் ஆசிரியர் நியமனங்களை வழங்கக்கோரி திருகோணமலையில் நேற்று (திங்கட்கிழமை) கவனவீர்ப்பு போராட்டம் ஒன்று இடம் பெற்றது.

கிழக்கு மாகாண தொண்டர் ஆசிரியர் சங்கம் இதனை ஏற்பாடு செய்திருந்தனர். அபயபுர சந்தியில் இருந்து நடை பவணியாக பதாகைகளை ஏந்தியவாறு கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் வரை தொண்டர் ஆசிரியர்கள் சென்றனர். கடல் தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவாநந்தாவின் படங்களை பதாகைகளாக ஏந்தியும் மூத்த அமைச்சர் கௌரவ டக்லஸ் ஐயா நிரந்தர நியமனத்தை பெற்றுத் தாருங்கள் போன்ற வாசகங்களையும் ஏந்தியிருந்தனர்.

இதன் போது கருத்துரைத்த கிழக்கு மாகாண தொண்டர் ஆசிரியர் சங்கத்தின் தலைவர் கு.சிவங்கர் -

தற்போது 250 தொண்டர் ஆசிரியர்கள் பாடசாலைகளில் கற்பித்தல் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். இலங்கையின் வடக்கு கிழக்கு உட்பட ஒட்டு மொத்தமாக தமிழ் பேசும் ஒரு சிரேஷ்ட கடல் தொழில் அமைச்சராக டக்ளஸ் தேவானந்தா காணப்படுகிறார் இவர் எங்களுக்கான நியமனத்தை பெற்றுத் தர வேண்டும் .

கடந்த யுத்த காலங்களில் பல இன்னல்களுக்கு மத்தியில் தொண்டராசிரியர்களாக கடமையாற்றியுள்ளோம் தற்போது உண்ணாவிரதம் போராட்டம் என பல விடயங்களை செய்து வருகிறோம் எனவே எங்களுக்கான நிரந்தர ஆசிரியர் நியமனத்தை பெற்றுத்தருமாறும் கோரிக்கை விடுக்கிறோம். - என்றார்.

இதன் போது குறித்த கவனவீர்ப்பில் கடல் தொழில் அமைச்சரின் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் மாவட்ட இணைப்பாளர் புஷ்பராசாவும் பிரசன்னமாகியிருந்ததுடன் மஹஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது அதனை ஏற்றுக் கொண்ட அவர் அமைச்சருக்கு அறிவித்து மஹஜரை அனுப்பி நியமனத்தை பெற்றுத்தர நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்.

இக் கவனவீர்ப்பில் சுமார் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கொளுத்தும் வெயிலில் பங்கு கொண்டனர்.

(05)

# தனக்கு கீழ் உள்ளவர்கள் முந்தி விடுவார்கள் என அஞ்சுபவர்கள் தலைவர்களே கிடையாது

## மக்கள் மத்தியில் எஸ்.எம். சபீஸ் தெரிவிப்பு





எமது சமூகத்தின் தலைவர்கள் தனக்கு அடுத்த படியில் உள்ளவர்களை தலைவர்களாக உருவாக்காமல் அவர்கள் எம்மை மிஞ்சி விடுவார்களோ என்ற அச்சத்தில் அவர்களை ஓரங்கட்டும் விதமாக செயற்படுவது தலைமைத்துவ பண்பாக அமையாது. ஆனாலும் கிழக்கின் கேடயம் அந்த கொள்கையிலிருந்து மாறுபட்டு அம்பாறையிலிருந்து நிறைய இளம் ஆளுமை மிக்க தலைவர்களை உண்டாக்கும் பணியை முன்னெடுத்து வருகிறது என கிழக்கின் கேடயம் தலைவரும், அக்கரைப்பற்று அனைத்து பள்ளிவாசல்கள் சம்மேளன முன்னாள் தலைவருமான எஸ்.எம். சபீஸ் தெரிவித்தார்.

எம்.எஸ். லங்கா வளாகத்தில் நடைபெற்ற கிழக்கின் கேடயம் பிரதான இப்தார் நிகழ்வில் மக்கள் மத்தியில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் அவர் உரையாற்றுகையில் -

முன்னாள் ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர். ஜெயவர்த்தன தனக்கு கீழிருந்த அரசியல் ஆளுமைகளைத் தலைவர்களாக உருவாக்கினார். அதே போன்று பெருந்தலைவர் எம்.எச்.எம். அஸ்ரப் அவர்களும் தனக்கு கிழிருந்த ஆளுமைகளை தலைவர்களாக உருவாக்கினார். அவர்களே இன்று எமது சமூகத்தை வழிநடத்தும் தலைவர்களாக இருக்கிறார்கள். இந்த தலைவர்களின் காலத்தின் பின்னர் புதிய தலைமைகளை உருவாக்க தலைவர்கள் முன்வராமை பாரிய குறையாக இருக்கிறது. அதனை நிவர்த்திக்க கிழக்கின் கேடயம் எப்போதும் களப்பணி செய்துகொண்டே வருகிறது.

கிழக்கின் கேடயம் அந்தப்பணியை சிறப்பாக செய்து எதிர்காலத்தை முன்னிறுத்திய தலைவர்களை உருவாக்கும் என்றார். இந்நிகழ்வில் கிழக்கின் கேடயம் ஆலோசகர் எஸ்.எம்.எம். ஹனீபா, பொதுச்செயலாளர் யூ.எல்.என். ஹுதா, தவிசாளர் ஏ.கே.அமீர், அரசியல் கட்சிகளின் முக்கியஸ்தர்கள், முன்னாள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், கிழக்கின் கேடயம் இணைப்பாளர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (05)

# தெல்லிப்பழை பாடசாலை கார்த்திகை பூ விவகாரம்: மனித உரிமை ஆணைக்குழுவில் முறையிட ஏற்பாடு



பாடசாலை மட்ட நிகழ்வுகளில் பொலிஸாரினதும் அரச புலனாய்வாளரினதும் இராணுவத்தினரின் தலையீடுகள் மற்றும் விசாரணை செயற்பாடுகளை இலங்கை ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது என இலங்கை ஆசிரியர் சங்க உப தலைவர் தீபன் தீலீசன் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு தீபன் திலீசன் அனுப்பி வைத்துள்ள செய்தி குறிப்பிலேயே அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

பாடசாலைகளில் நடைபெற்றுவரும் இல்ல விளையாட்டு நிகழ்வுகளில் அலங்கரிக்கப்படும் செயற்பாடுகள் தொடர்பாக - குறிப்பாக, வடக்கு கிழக்கு மாகாண பாடசாலைகளில் பொலிஸாரினதும் இராணுவத்தினரதும், அரச புலனாய்வாளர்களினதும் அச்சுறுத்தல் இடம்பெற்றுவருவது தனிமனித சிந்தனை மற்றும் மனச்சாட்சி சுதந்திரங்களை நசுக்கும் அடிப்படை மனித உரிமை மீறல்களாகும்.

இலங்கை அரசின் சட்ட வரையறைக்குட்பட்டு கருத்தியல் ரீதியாகவும் - கலை ரீதியாகவும் - குறியீட்டு வடிவங்கள் மூலமாகவும் - சமூகம் சார் பிரக்ஞைகளை வெளிப்படுத்தும் போது, அதனை அரச இயந்திரங்களால் நசுக்கும் செயற்பாடுகள் நடைபெறுவதற்கு அனுமதிக்க முடியாது.

இதற்கு கல்வித்திணைக்களங்களும் துணைபோகுமானால், கல்விக்குள் இராணுவ மற்றும் பொலிஸ் தலையீடுகளை ஆதரிக்கும் செயற்பாடுகளாகவே இவை அமையும்.

அண்மையில் நடைபெற்ற தெல்லிப்பழையில் பாடசாலையொன்றில் இல்ல மெய்வன்மை போட்டியின், இல்ல அலங்காரங்களில் மாணவர்கள் வெளிப்படுத்திய வெளிப்பாடுகள், இலங்கை அரசமைப்பில் ஏற்று அங்கீகரிக்கப்பட்டுள்ள அடிப்படை மனித உரிமைகள் தொடர்பான சிந்தனை மற்றும் மனச்சாட்சி சுதந்திரத்துக்கு உட்பட்டதாகும். இந்த விடயங்களில் பொலிஸாரோடு இணைந்து வடமாகாண கல்வி அமைச்சும் தலையீடு செய்வதென்பது மாணவர்களின் அடிப்படை உரிமைகளை மீறும் செயற்பாடு என்பதே இலங்கை ஆசிரியர் சங்கத்தின் நிலைப்பாடாகும்.

இவ்விடயம் தொடர்பாக, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும் முறைப்பாடு செய்யவுள்ளோம். இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பொருத்தமான விசாரணைகளை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக்கொள்கின்றோம். - என்றுள்ளது. (05)

காலைக்கதிர் Kalaikkathir

# ரெஜி ரணதுங்க ஞாபகார்த்த கரபந்தாட்டப் போட்டி கம்பஹா சியனே தரு விளையாட்டுகழகம் முதலிடம்









ரெஜி ரணதுங்க ஞாபகார்த்தக் கிண்ண கரபந்தாட்டப் போட்டியில் கம்பஹா சியனே தரு விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது. இரண்டாம் இடத்தை மீரிகம அபி விளையாட்டுக் கழகம் பெற்றுக் கொண்டது.

கம்பஹா மாநகரசபைக்குப்பட்ட மடமவத்த சியனே தரு கரபந்தாட்ட மைதானத்தின் திறப்பு விழாவையொட்டி நடைபெற்ற ரெஜி ரணதுங்க ஞாபகார்த்த கிண்ண கரபந்தாட்ட போட்டி ஞாயிற்றுக்கிழமை நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தலைமையில் நடைபெற்றது.

கம்பஹா மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளுக்கு கரபந்தாட்டத்தை பிரபலப்படுத்தும் நோக்கில் சியனே தரு கரபந்தாட்ட விளையாட்டுக் கழகம் இந்தப் போட்டியை ஏற்பாடு செய்திருந்தது.

இப் போட்டியின் 20 வயதுக்குப்பட்ட சிறுவர்களுக்கான வெற்றிக் கிண்ணப் போட்டிக்கான இறுதிப் போட்டி நீர்கொழும்பு லொயாலா பாடசாலைக்கும் சீதுவ தவிசமர மகா வித்தியாலயத்திற்கும் இடையில் இடம்பெற்றது. சீதுவ தவிசமர அணி சம்பியன் பட்டத்தை வென்றதோடு நீர்கொழும்பு லொயாலா பாடசாலை இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டது.

திறந்த ஆண்கள், 20 வயதுக்குப்பட்ட ஆண்கள் மற்றும் பெண்கள் மற்றும் 06 திறந்த ஆண்கள் அணிகள், 20 வயதுக்குப்பட்ட பெண்கள் அணிகள் 08 மற்றும் 20 வயதுக்குப்பட்ட பெண்கள் அணிகள் 10 என மூன்று நாள் போட்டிகள் இடம்பெற்றன.

20 வயதுக்குப்பட்ட பெண்களுக்கான இறுதிப் போட்டி கிரிந்திவெல சங்கமித்த வித்தியாலயத்திற்கும் மீரிகம கந்தன்கமுவ தேசிய பாடசாலைக்கும் இடையில் இடம்பெற்றது. கிரிந்திவெல சங்கமித்த பாடசாலை மாணவிகள் சம்பியன் பட்டத்தை வென்றனர். பெண்கள் பிரிவில் மீரிகம கந்தங்கமுவ தேசிய பாடசாலை வெற்றி பெற்றது.

இப் போட்டியின் பெண்கள் பிரிவில் சிறந்த பந்து வீச்சு வீராங்கனையாக கிரிந்திவெல சங்கமித்த வித்தியாலயத்தைச் சேர்ந்த எஸ்.டி.ஏ.வீரசிங்க, சிறந்த பைட்டராக மீரிகம கந்தன்கமுவ தேசிய பாடசாலையின் டபிள்யூ.பி. சுபானி மெத்சதி, மிகவும் திறமையான வீராங்கனையாக கிரிந்திவெல சங்கமித்த வித்தியாலயத்தின் பி.ஜி.எம். காவ்யா உள்ளிட்ட மூன்று வீராங்கனைகள் விருதுகளை வென்றனர்.

20 வயதுக்குப்பட்ட ஆண்களுக்கான போட்டியில் சிறந்த பந்து வீச்சாளராக நீர்கொழும்பு லொயாலா பாடசாலையின் திமுத் நிஷானும், சிறந்த பைட்டராக சீதுவை தவிசமர கல்லூரியின் மனுஜ் நிசாலும், சிறந்த வீரராக சீதுவை தவிசமர கல்லூரியின் எச்.தினேஷ் ஹர்ஷ சந்தருவன் விருதுகளைப் பெற்றனர்.

திறந்த போட்டியில் சிறந்த பந்து வீச்சாளராக கம்பஹா சியனே தரு விளையாட்டுக் கழகத்தின் ஜினேந்திர சில்வா விருது பெற்றார். சிறந்த பந்து வீச்சாளராக மீரிகம அபி விளையாட்டுக் கழகத்தின் நளீன் ஸ்ரீயந்த, சிறந்த பந்து வீச்சாளராக கம்பஹா சியனே தரு விளையாட்டுக் கழகத்தின் மொரிஸ் சமிந்த பெரேரா, சிறந்த பைட்டராக கம்பஹா சியனே தரு விளையாட்டுக் கழகத்தின் இசுரு மதுஷான், சிறந்த களத்தடுப்பாளராக கம்பஹா சியனே தரு விளையாட்டுக் கழகத்தின் ஆயேஷ் பெரேரா ஆகியோர் தெரிவானார்கள். கம்பஹா சியனே தரு விளையாட்டுக் கழகத்தின் வீராங்கனை அலோக விமுக்தி களத்தடுப்பாளர் விருதை வென்றார். முழுப் போட்டியிலும் சிறந்த வீராங்க னைக்கான விருதை கம்பஹா சியனே தரு விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த தீப்தி ரொமேஷ் பெற்றுக் கொண்டார்.

கம்பஹா மாநகர சபைக்கு உட்பட்ட மடமவத்தை சியனே தரு கரபந்தாட்ட விளையாட்டு அரங்கை நவீன உபகரணங்கள் மற்றும் ஏனைய வசதிகளுடன் மீள் அபிவிருத்தி செய்து அதனை அண்மித்த பகுதியை நகர அபிவிருத்தி பூங்காவாக அபிவிருத்தி செய்யும் பணிகள் 2021 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

2021ஆம் ஆண்டில், சியனே தரு உள்ளக கரபந்தாட்ட அரங்கத்தின் மறு அபிவிருத்தி திட்டத்திற்கான மதிப்பிடப்பட்ட தொகை 44,348,725.00 ஷரூபாவாகும். ஆனால் கொவிட் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக, இந்த அரங்கின் கட்டுமானம் நிறுத்தப்பட்டது. சியனே தரு கரப்பந்தாட்டக் கழகம் மற்றும் பிரதேச மக்களின் கோரிக்கைக்கு ஏற்ப புனரமைப்புப் பணிகளை மீள ஆரம்பிக்குமாறு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அண்மையில் நகர அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினார். இதன்படி, பொதுச் செலவினங்களைக் கட்டுப்படுத்துவதற்கான வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் இத்திட்டத்தை வெளிப்புற கரப்பந்தாட்ட விளையாட்டு அரங்கமாக அபிவிருத்தி செய்து மக்களுக்கு வழங்குவதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கை எடுத்தது.

இந்த சியனே தரு விளையாட்டுக் கழகம் சுமார் 74 வருட வரலாற்றைக் கொண்டுள்ளது. இந்த விளையாட்டுக் கழகத்தின் ஊடாக இலங்கை தேசிய கரப்பந்தாட்ட அணியின் மூன்று தலைவர்கள் உருவாக்கப்பட்டுள்ளதோடு, தற்போதைய தேசிய கரப்பந்தாட்ட அணியின் தலைவரும் இந்த விளையாட்டுக் கழகத்தில் இருப்பது விசேடமாகும்.

இந்நிகழ்வில் நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் நிமேஷ் ஹேரத், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் உப தலைவர் லக்ஷ்மன் குணவர்தன, நகர அபிவிருத்தி அதிகார சபையின் மேலதிக பணிப்பாளர் நாயகம் மஹிந்த விதானாரச்சி, மேல் மாகாண சபையின் தலைவர் சுனில் விஜேரத்ன, பிரதி பொலிஸ் மா அதிபர் சஞ்சய் மெதவத்த, சியனே தரு விளையாட்டுக் கழகத்தின் தலைவர் விமல் கமகே உட்பட பலர் கலந்து கொண்டனர். (05)

# சாய்ந்தமருது அல்–ஹிலால் வித்தி. மூலம் 225,000 ரூபா காஸா நிதிக்கு கையளிப்பு

(நூருல் ஹுதா உமர்)

அம்பாறை மாவட்டம், கல்முனை கல்வி வலய, வலயக்கல்வி பணிப்பாளர் எம்.எஸ். சஹதுல் நஜீம் மற்றும் கல்முனை கல்வி வலய கணக்காளர் வை. ஹபீபுல்லாஹ் ஆகியோரின் வழிகாட்டலில் பலஸ்தீன் காஸா சிறுவர்களின் ஜனாதிபதி நிதியத்துக்கு நிதிகள் கையளிக்கப்பட்டு வருகின்றன.

அதன் தொடரச்சியாக சாய்ந்தமருது கமு/ கமு/அல்-ஹிலால் வித்தியாலய ஆசிரியர்களால் இரண்டு இலட்சத்து இருபத்தையாயிரம் ரூபா வலயக்கல்வி அலுவலகத்தில் நேற்று (திங்கட்கிழமை) பாடசாலை அதிபர் யூ.எல். நஸார் தலைமையில் கையளிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் பாடசாலை பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள் கலந்து கொண்டு வலயக்கல்வி பணிமனையில் இந்த நிதியை கையளித்தனர். (05)





காலைக்கதிர் Kalaikkathir

# தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு லயன்ஸ் கழக பெண்கள் அமைப்பு உதவி





சர்வதேச லயன்ஸ் கழக மாவட்டம் 306 பிங இல் உள்ள லயன்ஸ் பெண்கள் அணியினரால் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை சத்திர சிகிச்சைக் கூடத்துக்கு 5 லட்சம் ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை வழங்கிவைக்கப்பட்டன.

வைத்தியசாலை சத்திரசிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி வாகீசன், விபத்துக்கள், காயங்களால் ஏற்படும் இரத்தச் சுற்றோட்டம் தடைப்படும் இடங்களைக் கண்டறியும் 'அல்ராசொனிக் பொக்கற் ரொப்லர்' இயந்திரத்தின் தேவைப்பாடு தொடர்பில் விளக்கமளித்து லயன்ஸ் கழகத்திடம் அதன் தேவைப்பாடும் முக்கியத்துவம் தொடர்பில் கோரிக்கை முன்வைத்திருந்தார்.

லயன்ஸ் கழகத்தில் முதற்பெண் லயன் சாவித்திரி பீற்றர் தலைமையில் இயங்கும் பெண்கள் அணித் தலைவி சானிகா பீரிஸ் தமது பெண்கள் அணி ஊடாக நிதி சேகரித்து அதனை வழங்க ஏற்பாடு செய்வதாகத் தெரிவித்தார்.

ஒரு மாதத்துக்குள்ளே முழு நிதியும் சேகரித்து 'அல்ராசொனிக் பொக்கற் ரொப்லர்' இயந்திரத்துடன் மேலதிகமாக இன்பியூசன் பம், 2 ஆயிரத்து 500 சத்திரசிகிச்சைக் கையுறைகள் என்பன கையளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் லயன்ஸ் கழக மாவட்ட ஆளுநர் லயன் பிளஸிடஸ் எம் பீற்றர், முதற்பெண் லயன் சாவித்திரி பீற்றர் மற்றும் லயன்ஸ் பெண்கள் அணியின் தலைவி லயன் சானிகா பீரிஸ், ஆளுநர்சபை செயலாளர் பிரனீத் பீரிஸ், தெல்லிப்பழை ஆதார வைத்திய நோயாளர் நலன்புரிச் சங்க செயலாளர் லயன் சி.ஹரிகரன், சத்திரசிகிச்சை நிபுணர்கள், தாதிய பரிபாலகி, வைத்திய உத்தியோகத்தர்கள், தாதியர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

(05)

## 3 முஸ்லிம்களிடம் சிங்கள முறையில் வணக்கம் செலுத்திப் பின் மன்னிப்புக் கோரிய பொலிஸார்

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் பதிவு செய்யப்பட்ட முறைப்பாடுகளின் அடிப்படையில் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கபட்டிருந்த ஹொரவப்பொத்தானையைச் சேர்ந்த மூன்று முஸ்லிம்களிடம் நேற்று (திங்கட்கிழமை) ஹொரவப்பொத்தானை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உட்பட ஐந்து பொலிஸ் உத்தியோகத்தர்கள் சிங்கள பாணியில் வணக்கம் செலுத்தி மன்னிப்புக் கோரினர்.

சட்டவிரோதமான முறையில் கைது செய்யப்பட்டு 6 மாதங்களுக்கும் மேலாக தடுத்து வைக்கப்பட்டுள்ளதன் மூலம் தமது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக தெரிவித்து செனுல் ஆப்தீன் இர்பான், செனுல் ஆப்தீன் கலிபத்துல்லா மற்றும் சகாரியா ஆகியோர் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனுக்கள் நேற்று உச்ச நீதிமன்ற நீதிபதிகள் துரைராஜா, குமுதுனி விக்கிரமசிங்க மற்றும் அச்சலா வெங்கப்புலி ஆகியோர் அடங்கிய அமர்வு முன் அழைக்கப்பட்ட போதே இந்த மன்னிப்பு கோரப்பட்டுள்ளது.

மேலும் மனுதாரர்களிடம் பொலிஸ் அதிகாரிகள் விசாரணை நடத்த மாட்டார்கள் என பிரதி சொலிசிட்டர் ஜெனரல் நீதிமன்றத்தில் உறுதியளித்தார்.

(05)

## கார்த்திகைப் பூவா இல்லை காந்தள் பூ 'சப்றைஸ்' கொடுக்கவே செய்தோம்!

### பாடப் புத்தகத்தை பொலிஸாருக்கு காட்டிய மாணவர்கள்



யாழ். யூனியன் கல்லூரியில் இடம்பெற்ற இல்ல மெய்வல்லுநர் போட்டியில் கார்த்திகைப் பூ மற்றும் இராணுவ வாகனத்தை ஒத்த அலங்காரங்கள் சனிக்கிழமை காட்சிப்படுத்தப்பட்டன.

குறித்த விடயம் தொடர்பில் தெல்லிப்பழை பொலிஸார் சில மாணவர்களையும் ஆசிரியர்களையும் ஞாயிற்றுக்கிழமை விசாரணைக்காக பொலிஸ் நிலையம் வருமாறு அழைத்தனர்.

விசாரணைக்காக மூன்று மாணவர்கள் சென்றனர் எனத் தெரிவிக்கப்படும் நிலையில் பொலிஸார் விசாரணையில் நீங்கள் இல்ல அலங்காரம் செய்தது கார்த்திகைப் பூவைத் தானே இதற்கான ஆலோசனைகளை ஆசிரியர்கள் தானே வழங்கினார்கள் என கேள்வி எழுப்பினார்.

இதன் போது பதில் வழங்கிய மாணவர்கள் நீங்கள் கூறுவதைப் போல குறித்த பூ கார்த்திகைப் பூ என நாங்கள் அறிந்திருக்கவில்லை காந்தள் மலர் என அறிந்துள்ளோம் எமது பாடப்புத்தகத்தில் அவ்வாறே உள்ளது.

அது மட்டுமல்லாது வருடத்தில் ஒரு முறை பூக்கும் அரிய மலர் அதனை பாதுகாக்க வேண்டும் என்பதற்காகவே காட்சிப்படுத்தினோம்.

இதன் போது கேள்வி எழுப்பிய பொலிஸார், உங்கள் இல்ல அலங்காரத்திற்கான ஆலோசனையை ஆசிரியர்கள் தானே வழங்கினார்கள் எனக் கேள்வி எழுப்பினார்.

இதன் போது பதிலளித்த மாணவர்கள் ஆசிரியர்களும் காந்தள் பூ இல்ல அலங்காரத்திற்கும் தொடர்பு இல்லை நாங்கள் இவ்வாறு அமைக்கப் போகிறோம் என அவர்களுக்கு தெரியப்படுத்தவும் இல்லை 'சப்றைஸ் ' வழங்க வேண்டும் என்பதற்காக தெரியாமல் வைத்தோம் என்றனராம்.

இதன் போது பல்வேறு வழிகளில் குறித்த இல்ல அலங்காரத்திற்கும் பாடசாலை ஆசிரியர்களுக்கும் முடிச்சுப் போட பொலிஸார் முனைந்த நிலையிலும் மாணவர்கள் ஒரே பதிலையை மீண்டும் மீண்டும் கூறினர்.

இந்த நிலையில் பாடசாலை அதிபரும் பொலிஸ் நிலையத்திற்கு வாக்கு மூலம் வழங்க அழைக்கப்பட்ட நிலையில் தனது வாக்குமூலத்தில் ஏற்கனவே இல்ல மெய்வல்லுநர் போட்டிக்கான பாடசாலை ஆசிரியர்கள் கூட்டத்தில் தெளிவாக்க கூறினேன்.

ஏற்கனவே கிளிநொச்சியில் இடம்பெற்ற இல்ல அலங்காரம் அது தொடர்பில் எழுந்த சர்ச்சை தொடர்பில் கூட்டத்தில் தெரிவித்தேன்.

இவ்வாறான அலங்காரம் தொடர்பில் தானும் அறிந்திருக்கவில்லை என வாக்குமூலத்தில் தெரிவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(05)

## வீட்டு நிர்மாணப் பணியின்போது மண்மேடு சரிந்து ஒருவர் சாவு



பூஜாபிட்டிய கஹவத்த பிரதேசத்தில் வீடு ஒன்றை நிர்மாணிப்பதற்காக அத்திபாரம் வெட்டி தூண்களை அமைத்துக் கொண்டிருந்த இருவர் மீது மண் மேடு சரிந்து வீழ்ந்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் ஒருவர் காயமடைந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பூஜாபிட்டிய திவானவத்த பகுதியைச் சேர்ந்த ஜகத் விஜேசூரிய என்ற 54 வயதுடைய நான்கு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

பிரதேசவாசிகள் இருவரையும் மீட்டு அக்குறணை வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போதிலும் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், ஆபத்தான நிலையில் இருந்த மற்றைய நபர் கண்டி தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

(05)

## தமிழ் அரசுக் கட்சி நிர்வாகத் தெரிவு குறித்த வழக்கு ஏப்ரல் 5ஆம் திகதி

### குகதாசன் தகவல்

(ஹஸ்பர் ஏ.எச்)

தமிழரசுக் கட்சியின் நிர்வாகத் தெரிவு தொடர்பான நீதிமன்ற நடவடிக்கைகள் இடம் பெற்று வரும் நிலையில் அடுத்த தவணை எதிர்வரும் 5 ஆம் திகதி இடம்பெறவுள்ளது என தமிழரசு கட்சியின் திருகோணமலை மாவட்ட கிளை தலைவர் சண்முகம் குகதாசன் தெரிவித்தார்.

திருகோணமலையில் இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் -

எந்த தேர்தல் வந்தாலும் நாங்கள் முகங்கொடுக்க தயாராகவுள்ளோம்

ஜனாதிபதி தேர்தலின் போது பொது வேட்பாளரை ஆதரிப்பது தொடர்பில் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்பு மத்திய குழு கூடி சரியாக பொருளாதார நெருக்கடிகளை தீர்க்கவும் மக்கள் பிரச்சினைகளை தீர்க்க கூடியதுமான வேட்பாளரை தெரிவு செய்வோம். இது மத்திய குழுவின் தீர்மானத்தின் பின் சரியான முடிவுகளை எடுப்போம். கட்சியின் நிருவாக தெரிவு தொடர்பில் வழக்கு இடம் பெற்று வரும் நிலையில் 7 பேர் எதிர்தரப்புகளாக பெயரிடப்பட்டுள்ளனர். இதற்கான சாதகமான முடிவுகள் கிடைக்கும் பட்சத்தில் தெரிவை மீண்டும் நடத்தலாம் என எழுவரும் கூடி தீர்மானத்தை மேற்கொள்ள முடியும்.

எமது கட்சி பெண்களுக்கான சுயதொழில் வழங்குதல், தொண்டர் ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு வழங்குதல், தந்தை செல்வாவின் நினைவு தினம் அனுஷ்டிப்பு போன்ற பல விடயங்களை செய்துள்ளது. - என்றார்.

(05)

காலைக்கதிர் Kalaikkathir

# ஆட்டிசம் குழந்தைகளும் உள சிகிச்சைகளும்

வினோதர்ஷினி வினோகாந்த்

இன்றைய உலகில் பல மில்லியன் கணக்கான குழந்தைகள் ஆட்டிசம் எனும் நரம்பியல் வளர்ச்சி கோ ளாறினால் பாதிக்கப்பட்டுள்ளனர். தமிழ் அகராதியில் 'ஆட்டிசம்' என்பதற்கு 'மூளை இறுக்கம்' என அர்த்தம் வழங்கப்படுகிறது. இதனை புரிந்துகொள்ளும் வகையில் கூறுவதாயின் 'ஆட்டிசம்' என்பது வழமைக்கு மாறான மூளை விருத்தியைக் குறிக்கின்றது. அதாவது மூளையின் நரம்புத் தொகுதியின் போதிய வளர்ச்சி இன்மையின் காரணமாக உணர்வுகளும் உணர்ச்சிகளும் சாதாரண மக்களிலும் பார்க்க வித்தியாசமான முறையில் வெளிக்காட்டும் தன்மைக் காணப்படும். குறிப்பாக குழந்தை பிறந்தது முதல் இறக்கும் வரை ஒருவரில் ஆட்டிசம் பாதிப்பு காணப்படும். அதேசமயம் ஒருவரிடமிருந்து மற்றவருக்கு பரவும் தொற்று நோய் கிடையாது. ஆனாலும் உலகலாவிய ரீதியில் இன்று கவனத்தை ஈர்க்கும் நோய்நிலைமையாக ஆட்டிசம் கருதப்படுகின்றது.

குறிப்பாக உலகில் பிரான்சில் தான் ஆட்டிச குழந்தைப் பிறப்பு வீதம் குறைவாக காணப்படுகின்றது. அதாவது இங்கு பிறக்கும் 144 குழந்தைகளில் ஒரு குழந்தை ஆட்டிசம் பாதிப்புடன் பிறக்கிறது. மாறாக கட்டாரில் தான் ஆட்டிச குழந்தைப் பிறப்பு அதிகமாக உள்ளது. இங்கு 66 குழந்தைகளில் ஒரு குழந்தை ஆட்டிசம் பாதிப்புடன் பிறக்கிறது. அதேசமயம் அரபு நாடுகளில் 89 குழந்தைகளில் ஒரு குழந்தை ஆட்டிசம் பாதிப்போடு பிறப்பதாக ஆய்வுகள் கூறுகின்றது. உலகில் சாரசரியாக 100ல் ஒரு குழந்தை ஆட்டிசம் பாதிப்போடு பிறக்கிறதுடன் ஆட்டிசம் உள்ள பெண் பிள்ளைகளை விட ஆண் பிள்ளைகள் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். அதாவது 5:1 என்ற விகித்தில் பாதிக்கப்படுகின்றனர் என உலக சுகாதார ஸ்தாபனம் (றுர்மு) தனது அறிக்கையில் வெளியிட்டுள்ளது. இதன் தீவிர தன்மையினை குறைக்கும் பொருட்டும் விழிப்புணர்வினை மக்களுக்கு ஏற்படுத்தும் பொருட்டும் ஒவ்வொரு ஆண்டும் சித்திரை மாதம் 2ம் திகதியில் ஆட்டிசம் தினம் (Autism Spectrum Disorders) தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

எமது நாட்டிலும் ஆட்டிசம் நோய் அச்சுறுத்துவதாக காணப்படுகின்றது. அதாவது இலங்கை நாட்டை பொறுத்தவரையில் 2009 ஆம் ஆண்டிலேயே முதன் முதலில் ஆட்டிசம் கற்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன்படி இலங்கையில் பிறக்கும் நூறு குழந்தைகளில் ஒன்று 'ஆட்டிசத்திற்கு உள்ளாவது கண்டறியப்பட்டது. மேலும் இலங்கையில் வருடாந்தம் பிறக்கும் 03 இலட்சத்து 75 ஆயிரம் சிசுக்களில் 3 ஆயிரத்து 750 சிசுக்கள் ஆட்டிசத்தினால் பாதிக்கப்படுவதாக சுகாதார அமைச்சின் ஆய்வுகள் தெரிவிக்கின்றது. மேலும் சுகாதார அமைச்சு நாடளாவிய ரீதியில் மேற்கொண்ட கணக்கெடுப்புகளின்படி 05 வயதுக்கு குறைந்த சுமார் 18 ஆயிரத்து 750 ஆட்டிசம் சிறுவர்கள் இலங்கையில் உள்னர் என கண்டறியப்பட்டுள்ளது. இவ்வாறு ஆட்டிசம் நோயின் தாக்கம் உலகநாடுகளுக்கு சவால் மிகுந்ததாக காணப்படுகின்றது என்றே கூற வேண்டும்.

ஆட்டிசம் நோயினை ஏற்படுத்தும் காரணிகள் எனும் போது-

-மரபணு காரணிகள்: குடும்பத்தில் உடன்பிறந்தவருக்கு ஆட்டிசம் தீவிரமாக காணப்பட்டால் அடுத்த குழந்தைக்கு இதன் பாதிப்பு காணப்படும்.

-சுற்றுச்சூழல் காரணிகள்: கனரக உலோகங்கள் மற்றும் சுற்றுச்சூழலில் உள்ள நச்சுகள் பொருட்களை சுவாசிப்பதால் ஏற்படும்.

-கர்ப்ப காலத்தில் ஏற்படும் அதித இரத்தப்போக்கு

-கர்ப்ப காலத்தில் தாலிடோமைடு மற்றும் வால்ப்ரோயிக் அமிலம் போன்ற மருந்துகளை அதிகளவில் தாய் உட்கொள்ளுதல்

-கர்ப்ப காலத்தில் ஏற்படும் நீரிழிவு நோய்

-மகப்பேறுக்கு முந்தைய மருந்து பயன்பாடு

-குழந்தை பிறக்கும் போது தாயின் வயது அதிகமாக இருத்தல் போன்ற காரணிகளால் ஆட்டிசம் குழந்தைகள் பிறக்கின்றது. ஆட்டிசம் கொண்ட குழந்தையின் இயல்பான வளர்ச்சியில் ஏற்படும் இடையூறுகள் பொதுவாக மூன்று வயதுக்கு முன்பே உருவாகின்றன. ஆட்டிசம் நோய் கண்டறிதல் இரண்டு நிலைகளைக் கொண்டுள்ளது.

1. 'குழந்தையின் ஆரோக்கியம்' சோதனையின் போது (முதல் நிலை) - குழந்தையின் வளர்ச்சி திரையிடல் செய்யப்படும்

2. பலதரப்பட்ட குழுவின் மதிப்பீடு (இரண்டாம் நிலை) - மருத்துவர் உடல் பரிசோதனை, மருத்துவ வரலாறு, செவிப்புலன் சோதனைகள் மற்றும் முழுமையான நரம்பியல் பரிசோதனை மூலம் நோயறிதலைச் செய்வதன் மூலம் கண்டறியப்படுகின்றது.

குறிப்பாக ஆட்டிசம் நோயின் அறிகுறிகள் பொதுவாக 24 மாதங்கள் முதல் ஆறு வயது வரை தெளிவாகத் தெரியும். ஆட்டிசத்தின் அறிகுறிகள் லேசானது முதல் கடுமையானது வரை இருக்க கூடும். ஆட்டிசம் கொண்ட சில பிள்ளைகள் எந்தவித பின்னடைவும் இல்லாமல் ஆரோக்கியமான செயல்பாட்டு வாழ்க்கையை நிர்வகிக்க முடியும். கடுமையாக பாதிக்கப்பட்ட ஆட்டிசம் பிள்ளைகள் வாழ்க்கை முழுவதும் செயற்த்திறன் ஆற்றவர்களாக இருப்பர். இதன் முக்கிய அறிகுறிகள் எனும் போதுஇ



-தகவல்தொடர்புகளின் அசாதாரண அல்லது பலவீனமான வளர்ச்சி காணப்படும்

-மொழி மற்றும் அறிவாற்றல் வளர்ச்சியில் குறிப்பி டத்தக்க தாமதம் காணப்படும்

-பலவீனமான சமூக தொடர்பு காணப்படும்

-பிறந்து ஆறு மாதங்கள் அல்லது அதற்குப் பிறகு, மகிழ்ச்சியான வெளிப்பாடுகள் அல்லது புன்னகைகள் எதுவும் காணப்படாது

- பிறந்து ஒன்பது மாதத்தில் முகபாவனைகள், புன்னகைகள் மற்றும் ஒலிகள் உணரப்படாமல் இருக்கும்

- பிறந்து 12 மாதத்தில் சுட்டிக்காட்டுதல், காட்டுதல், எட்டுதல் அல்லது அசைத்தல் போன்ற சைகைகள் எதுவும் இருக்காது

-குழந்தையின் பெயரைக் கூப்பிடும்போது அல்லது கத்தும்போது குழந்தை பதிலளிக்காது காணப்படும்,

-குழந்தை 16 மாதத்திற்குள் எந்த வார்த்தையும் பேசாமல் இருத்தல்

-குழந்தை 24 மாதத்திற்குள் ஒரு செயலை மீண்டும் செய்யாமலோ அல்லது பிரதிபலிக்காமலோ இருந்தல்

-கண்ணோடு கண் பார்க்க மாட்டார்கள்



-முகத்தை நேருக்கு நேர் பார்க்காது இருத்தல்

-சில விசயங்களை திரும்ப திரும்ப ஒரே மாதிரி செய்துகொண்டு இருத்தல்

-நாம் சுட்டிகாட்டும் பொருளையோ , திசையையோ பார்க்காது இருத்தல்.

-ஆள்காட்டி விரலை உபயோகிக்க தெரியாது இருத்தல்.

அதாவது ஆட்டிசம் பிள்ளைகளின் தகவல் தொடர்பு சமூக ஊடாடல் அறிவாற்றல் மற்றும் நடத்தையை ஒட்டுமொத்தமாக பாதிப்பதாக காணப்படுகின்றதுடன் ஆட்டினம் நோய் உயிராபத்தை ஏற்படுத்தாது. அதற்கென விசேடமாக மருந்துகள் உட்கொள்ள அவசியமில்லை என்றும் வைத்திய நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். இருப்பினும் ஆட்டிசம் குழந்தைகள் ஏனைய குழந்தைகளைப் போன்றே சாதாரண உடல் வளர்ச்சியைக் கொண்டிருப்பர். ஆனால் மந்தநிலையில் செயற்படுபவர்களாக ஆட்டிசத்தால் பாதிக்கப்பட்ட பிள்ளைகள் காணப்படுவார்கள். மேற்கூறிய அறிகுறிகள் இருந்தால் மருத்துவரை அனுகி ஆலோசனை பெற வேண்டும்.

இன்றைய காலத்தில் ஆட்டிசத்துக்கான சிகிச்சைகள் அல்லது தலையீடுகள் அனைத்தும், ஆட்டிசத்தால் பாதிக்கப்பட்ட ஒரு குழந்தையின் வளர்ச்சி சார்ந்த பிரச்னைகள் என்பவற்றைக் காணப்படுகின்றது. மருத்துவ சிகிச்சையோடு இணைந்த வகையில் உளவியல் சிகிச்சைகளும் வழங்கப்படுவதால் ஆட்டிசத்தால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளிடையே உடலியல் மற்றும் உளவியல் ரீதியான முன்னேற்றம் அடைந்து வருவதாக ஆய்வுகள் கூறுகின்றது. குறிப்பாக அமெரிக்காவில் 36 சதவீதமான ஆட்டிசம் குழந்தைகள் சாதாரண மாணவர்களுடன் கல்வி கற்பதுடன் 19 சதவீதமானவர்கள் எவரது உதவியுமின்றி தனியாக வாழ்கிறார்கள் மற்றும் 58 சதவீதமானவர்கள் தொழில் செய்கிறார்கள் என அமெரிக்க ஆய்வுகள் சுட்டிக்காட்டியுள்ளது. இதற்கு காரணம் ஆட்டிசத்தால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு தொடர்ச்சியாக வழங்கப்படும் எள சிகிச்சை முறைகளே காரணமாக அமைகின்றது என்றே கூற வேண்டும்.

ஆட்டிசத்தால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு வழங்கப்படும் உளவியல் சிகிச்சை முறைகள் எனும் போது-

- தொழில் வழிக்காட்டல் சிகிச்சை (Occupational Therapy) :- சிகிச்சை முறையானது ஆட்டிசத்தால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு சுய பாதுகாப்பு தன்னைத்தானே விருத்தி செய்து கொள்ளக்கூடிய செயல்களை குறித்த பயிற்சியை அளிக்கின்றது உதாரணமாக உணவு உண்ணுதல் உடை மாற்றுதல் போன்ற குறிப்பிட்ட செயல்களை உதவி இல்லாமல் குறித்த செயல்களை தானே செய்வதற்கு பயிற்சி வழங்குவதை அடிப்படையாகக் கொண்ட சிகிச்சையாக காணப்படுகின்றது. இந்த சிகிச்சையில் பிள்ளைக்கு குறித்த ஒரு வாழ்வாதார பயிற்சி வழங்குவது என்பது பிரதானமாக காணப்படுகின்றது

-பேச்சு சிகிச்சை (Speech therapy):- குறித்த ஆட்டிசத்தால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு இச்சிகிச்சை மேற்க்கொள்ளப்பட்டது. அதாவது இப்பிள்ளைகள் அதிகமாக பேசுவது அல்லது தெளிவாக பேசுவது தொடர்புபடுத்தி பேசுவது கிடையாது. ஆனால் இந்த சிகிச்சையானது ஆட்டிசத்தால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு அதிகமாக உரையாடுதல் பேசும் போது தெளிவாக பேசுவதற்கு பயிற்சிகளை அளித்தல் தொடர்பு படுத்தி பேசுவதற்கான பயிற்சிகளை அளித்தல் என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டு சிகிச்சை முறையாவது மன வளர்ச்சி குறைந்த பிள்ளைகள் மத்தியில் ஊக்குவிக்கப்படுகின்றது

-உணவுமுறை சிகிச்சை (Orthomolecular therapy) :- இச்சிகிச்சை முறையானது ஆட்டிசத்தால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு சில குறிப்பிட்ட உணவுகளை வழங்க வேண்டும். அத்தகைய உணவுகளை ஆரோக்கியமான முறையில் வழங்குவது மட்டுமல்லாது ஊட்டச்சத்தான உணவை கண்டறிந்து குறித்த பிள்ளைக்கு வழங்கும் அறிவினை ஏற்படுத்துவதோடு ஒரு அட்டவணையை அடிப்படையாகக் கொண்ட சிகிச்சை முறையாக கருதப்படுகின்றது

-உடலியல் சிகிச்சை (Physical therapy) :- ஆட்டிசத்தால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் உடல் வளர்ச்சி என்பது மந்தமான நிலையில் காணப்படும். அதுமட்டுமல்லாது இவர்களிடம் உடல் இயக்கத் தன்மை மற்றும் சுறுசுறுப்பு குறைவாக காணப்படுவதால் அதிக நோய்க்கு உள்ளாகும் தன்மை காணப்படுகின்றது. இந்நிலைமையை குறைப்பதற்காக சிகிச்சையின் உதவியைக் கொண்டு உடல் இயக்கங்களை முறையாக வெளிப்படுத்துவதற்கான உடற்பயிற்சிகள் தியானம் செய்தல் என்பன மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

-அறிகை நடத்தை சிகிச்சை (Cognitive Behavioral Therapy) :- பெரும்பாலான சிகிச்சையானது ஆட்டிசத்தால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளிடம் அதிகம் பயன்படுத்தப்படுகின்றது. அதாவது இப்பிள்ளைகளிடம் மனசோர்வீவுளுனுஇ முஊனு தூக்க கோளாறு போன்ற நோய்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு. அதனை சமாளிக்கும் உத்திகளை தெளிவுப்படுத்துகின்றதுடன் இச்சிகிச்சையானது சிந்தனைகளை மாற்றியமைத்து தகவல் தொடர்புகளை மேம்படுத்தவும் உடல் நோய்களை சமாளிக்கவும் (11ஆம் பக்கம் பார்க்க..)

# இந்திய பாஜக அண்ணாமலைக்கு தேர்தல் காய்ச்சல் வந்துவிட்டது

## மீனவர்கள் குற்றச்சாட்டு

இந்தியா பா.ஜ.க. கட்சியின் தமிழ்நாடு மாநில தலைவர் குப்புசாமி அண்ணாமலைக்கு தேர்தல் காய்ச்சல் வந்துவிட்ட நிலையில் கச்சதீவு தொடர்பில் பிதற்ற ஆரம்பித்துவிட்டார் என யாழ் மாவட்ட கடற்தொழிலாளர் கிராமிய அமைப்புக்களின் தலைவர் செல்லத்துரை நற்குணம் தெரிவித்தார்.

யாழ் மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கச்சதீவு எமது சொத்து இந்தியா. இலங்கைக்கு தாரை வார்த்துவிட்டதாக தமிழக பா.ஜ.க. தலைவர் குப்புசாமி அண்ணாமலை தெரிவித்த கருத்தை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

அண்ணாமலைக்கு தற்போது தேர்தல் காய்ச்சல் ஆரம்பித்த நிலையில் தமிழக மீனவர்களின் வாக்குகளை அபகரித்துக் கொள்ளும் கபடத்துடன் தான் பேசுவது என்ன என்று தெரியாமல் புலம்ப ஆரம்பித்துள்ளார்.

1974 ஆம் ஆண்டுக்கு முன்னர் இலங்கை மீனவர்கள் இந்தியாவில் கன்னியாகுமரி நாகப்பட்டினம் ஆகிய பிரதேசங்களில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தனர்.

இதன் காரணமாக அப்போதைய இந்திய அரசாங்கம் இலங்கை மீனவர்களைக் கட்டுப்படுத்தும் முகமாக ஒப்பந்தம் என்ற போர்வையில் எம்மைக் கட்டுப்படுத்துவதற்காக வலிந்து ஒப்பந்தத்தை மேற்கொண்டனர்.

ஆனால் அண்ணாமலை காங்கிரஸ் அரசாங்கம் கச்சதீவை இலங்கைக்கு தாரைவார்த்து விட்டதாக கூறி வருகிறார் என்றார்.

குறித்த ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த யாழ். மாவட்ட கடற் தொழிலாளர் சமாசத்தின் உப தலைவர் பிரான்ஸிஸ் ரட்ணகுமார், பாஜக தமிழக தலைவர் அண்ணாமலை அரசியலுக்கு வர முன் பொலிஸ் அதிகாரியாக செயற்பட்டவர் என ஊடகங்கள் வாயிலாக அறிந்தேன்.

இலங்கை மீனவர்கள் பிரச்சினை திருடன் பொலிஸ் விளையாட்டு என அண்ணாமலை நினைக்கக் கூடாது இது எமது உயிர் சம்பந்தப்பட்ட பிரச்சினை.

ஆகவே, கச்சதீவு எமது சொத்து யாரும் உரிமை கோர முடியாது நிலையில் அண்ணாமலை தேவையற்ற பொய்களை பரப்ப முனைந்தால் கச்சதீவு எல்லையில் அண்ணாமலையின் கொடும்பாவியை கொளுத்தத் தயங்கோம் என அவர் மேலும் தெரிவித்தார். (05)

# மதுரங்குளி பிரதேசத்தில் வீடொன்றில் தீ விபத்து

(எம்.எச்.எம் சியாஜ்)

மதுரங்குளி, முக்குதொடுவாவை பிரதேசத்தில் ஞாயிற்றுக்கிழமை இரவு வீடொன்றில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இதன்போது வீட்டிற்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்கள் சேதமடைந்துள்ளதாகவும், உயிர் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் ஞாயிறு இரவு 11 மணியளவில் இடம்பெற்றதோடு, சிலாபம் மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவினர் தீயணைப்பு பணிகளில் ஈடுபட்டனர்.

அத்தோடு, இந்த பிரதேசத்தில் வாழும் இருவரால் வீட்டிற்கு தீ வைக்கப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதாக பொலிஸார் தெரிவித்த நிலையில், அப் பிரதேசத்தின் ரின் மீன் தொழிற்சாலை தொடர்பாக வீட்டின் உரிமையாளருடன் ஏற்பட்ட பிரச்சினையின் காரணமாகவே தீ விபத்து இடம் பெற்றுள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (05)

# வீட்டுக்குள் புகுந்த மோட்டார் சைக்கிள்

## இருவர் வைத்தியசாலையில்




யாழ் இராசாவின் தோட்டப் பகுதியில் வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வாசல் கதவை பிரிந்து உள்ளே நுழைந்து விபத்துக்குள்ளானது.

குறித்த விடயம் தொடர்பில் தெரியவருவதாவது -

யாழ்.ஆரியகுளப் பகுதியில் இருந்து வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் அருகில் இருந்த வீட்டின் மூடிய வாயில் கதவை உடைத்துக் கொண்டு உள்ளே சென்றது.

விபத்தில் காயமடைந்த இருவரும் யாழ் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர். (05)

# சிட்னியில் சுவாமி விபுலானந்த அடிகளாரின் சிலை திறப்பு விழா வரலாற்றில் இடம்பிடிப்பு

## பன்னாட்டு அறிஞர்கள் பங்கேற்பு

சங்கத்தமிழ் பாடிய சிங்கத்தமிழன் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் திருவுருவச்சிலை ஆஸ்திரேலிய மண்ணில் சிட்னி மாநகரில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு கோலாகலமாக திறந்து வைக்கப்பட்டது.

உலகில் முதல் தடவையாக இலங்கைக்கு வெளியே நிறுவப்படும் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்தருக்கான முதலாவது சிலை திறப்பு விழா இது என்பதால் உலக வரலாற்றில் இடம்பிடிக்கிறது.

இலங்கைக்கு வெளியில் முதல்முறையாக இடம்பெற்ற இவ்வாறானதொரு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வில் உலகின் பன்னாட்டு அறிஞர்கள் பலரும் பங்கேற்றனர்.

சிட்னி துர்க்கை அம்மன் ஆலய மண்டபத்தில் சிட்னி உதயசூரியன் மாணவர் உதவி மையத்தின் ஸ்தாபகரும், ஆஸ்திரேலியா காரைதீவு மக்கள் ஒன்றியத்தின் போஷகரும், சமூக செயற்பாட்டாளருமான நாகமணி குணரெட்ணம் அவர்களுடைய முழு முயற்சியின் பேரில் சுவாமி விபுலானந்த அடிகளார் திருவுருவச் சிலை நிறுவப்பட்டுள்ளது.

இதனை சுபநேரத்தில் சிலைநிறுவுனர் குணரெத்தினம் மனோன்மணி தம்பதியினர் மங்கலபேரிகைகள் முழங்க, திரைநீக்கம் செய்து மாலை சூட்டி நெற்றித்திலகமிட்டு திறந்து வைத்தனர்.

திரைநீக்க நிகழ்வில், பல்வேறு நாடுகளில் இருந்து வருகை தந்திருந்த பேராசிரியர்கள், தமிழ் அறிஞர்கள், கல்வியியலாளர் பெருமக்களின் பங்கேற்போடும் அவை நிறைந்த மக்கள் கூட்டத்தோடு வெகு சிறப்பாக சிட்னி மாநகரில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வின் சிறப்பு அதிதிகளாக அண்ணாமலை பல்கலைக்கழக -கனடா வளாகத்தின் தலைவர் காரைதீவைச்சேர்ந்த பேராசிரியர் பாலசுந்தரம் இளையதம்பி, மலேசியா தமிழ் பல்கலைக்கழக பேராசிரியர் மன்னன், இந்திய முனைவர் மு. இளங்கோவன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்.


சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்த நிகழ்வில் 'சிட்னியில் அடிகளார் படிவமலர்' என்ற சிறப்பு மலர் வெளியிட்டு வைக்கப்பட்டது.

முதற் பிரதியை சிலைநிறுவுனரும் நூலாசிரியருமான நாகமணி குணரெட்ணம், பேராசிரியர் பாலசுந்தரம் அவர்களுக்கு வழங்கி வைத்தார்.

அழைக்கப்பட்ட பேராளர்களின் பேருரைகள், சிறப்புரைகள் மற்றும் தொகுப்புரைகள் என்று நடைபெற்ற நிகழ்வு களைகட்டியது.

சிலை நிறுவுனர் உதயசூரியன் நாகமணி குணரெட்ணம் தம்பதியினர் பொன்னாடை போர்த்தி பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

மேலும், வாழ்நாள் சாதனையாளர் விருது 23 பேருக்கும் சிறப்பு விருது 14 பேருக்கும் வழங்கப்பட்டது. மாலை 5.00 மணியளவில் தொடங்கிய விழா இரவு 10.30 வரை பல கலைநிகழ்ச்சிகளுடன் நடைபெற்றது. (05)



# ஆட்டிசம் குழந்தைகளும்.....

(10ஆம் பக்கத் தொடர்ச்சி...)

நாளப்பட்ட உடல் அறிகுறிகளை நிர்வகிக்கவும் உணர்ச்சிகளை கட்டுப்படுத்தவும், இச்சிகிச்சை முறை பயன்படுத்தப்படுகின்றது



இத்தகைய உளவியல் சிகிச்சைகளை நோக்கும்போது ஆசிரியர்கள் பெற்றோர்கள் மருத்துவர்கள் சிகிச்சை முறையை கையாளும் நுப்பத்தை தெரிந்து இருக்க வேண்டும். குறிப்பாக ஆட்டிசம் பிள்ளைகளை வழிநடத்தும் பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் தொழில் வழிகாட்டல் சிகிச்சைஇ பேச்சு சிகிச்சை முறையாக கையாளுவதுடன் மருத்துவர்கள் உணவுமுறை சிகிச்சை குறித்து தெளிவான அறிவை பெற்றோருக்கு வழங்குவதோடு அறிகை நடத்தை சிகிச்சை முறையாக வழங்குபவராக இருக்கும்போது ஆட்டிசம் குறைப்பாட்டை இலகுவில் நிவர்த்தி செய்து கொள்ள முடியும். மேலும் இத்தகைய சிகிச்சை முறைகள் உள்ளது என்பதை பெற்றோருக்கு மிகத் தெளிவாக விழிப்புணர்வு ஏற்படுத்துவதுடன் சிகிச்சை முறைகளைக் கொண்டு பிள்ளைகளை குணப்படுத்த முடியும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும். மேலும் ஆட்டிசம் பிள்ளைகளுக்கு உள கல்வி (Psycho Education) வழங்குவது என்பது முக்கியமாகும். இந்த கல்விமுறையானது விசேட தேவை உடையோர் கல்வி கற்கும் பாடசாலைகளில் அல்லது விசேட மருத்துவமனைகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது அந்தவகையில் இந்நிறுவனங்களில் பிள்ளைகளின் உணர்ச்சிகளை கட்டுப்படுத்தும் வகையிலான செயற்பாடுகள் திட்டங்கள் மற்றும் பெற்றோருக்கான ஆலோசனைகள் என்பன முறையாக வழங்கப்பட்டு வருகின்றதை பெற்றோருக்கு சான்றுப்படுத்துதல் அவசியமாகும்.

ஆட்டிசம் பிள்ளைகளிடையே சிறப்பு கலைத்திட்டம் ஒன்றினை பயன்படுத்த வேண்டும். இதில் எழுத்து மற்றும் செயல்முறை பயிற்சிகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதோடு அவர்களுடைய அன்றாட வாழ்க்கை செயல்களை செய்ய பழக்கப்படுத்த வேண்டும். இதன் மூலம் ஆட்டிசம் பிள்ளைகள் தன்னைத்தானே விருத்தி செய்து கொள்வதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்

பெற்றோருக்கான ஆலோசனை (Counseling For Parent) என்பது மிக முக்கியமான ஒன்றாக கருதப்படுகின்றது. இதன் போது பிள்ளைகளுடன் எவ்வாறு அணுகலாம். என்னென்ன வகையில் உதவியாக இருக்க முடியும் போன்ற பல்வேறு விதமான அறிகுறிகளை வழங்குவதன் மூலம் ஆட்டிசம் குழந்தைகளின் நடத்தை குறித்த அறிவு பெற்றோருக்கு ஏற்படும். இதனால் குறித்த பிள்ளையின் நடத்தையை சீரமைக்க பெற்றோருக்கு உதவியாக இருக்கும். மேலும் பிள்ளையின் வீட்டு சூழலைப் பொருத்தவரையில் பெற்றோர் மற்றும் சகோதரர்களின் ஒத்துழைப்பை பிள்ளைக்கு முழுமையாக வழங்க வேண்டும்.

இத்தகைய உளவியல் சிகிச்சை முறைகளினை தொடர்ச்சியாக வழங்கும் போது ஆட்டிசத்தின் பாதிப்பை குறைத்துக் கொள்ள முடிவதுடன் பிள்ளைகளின் ஆளுமை வளர்ச்சியினை விருத்தி செய்துக் கொள்ளக்கூடியதாக காணப்படுகின்றது. மேலும் உள சிகிச்சைகள் மருத்துவ சிகிச்சையுடன் இணைந்து தற்காலத்தில் முன்னெடுக்கப்படுவதால் அதிக வினைதிறனுடன் காணப்படுவதுடன் பிள்ளையின் உள வளர்ச்சியிலும் முன்னேற்றம் ஏற்படுகின்றது என்றே கூறவேண்டும்.

**கட்டுரையாளர் யாழ்ப்பாண பல்கலைக்கழக உளவியல் துறை உதவி விரிவுரையாளர்**




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.04.2024இல் வெளியிடப்பெற்றது